

உஷ்

அரிசித் தட்டுப்பாடு ஏற்படும் நிலைமை வருமாயின் தேவையானளவு அரிசியை இலங்கைக்கு தர தயாரென சீனா செய்தி அனுப்பியுள்ளதாம். ஆனால் சீனா அரிசி இங்கே செட் ஆகுமா என்ற சிக்கல் இருப்பதால் அமைதியாக இருக்கிறதாம் அரச மேலிடம்.


Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 125 குரோதி வருடம், கார்த்திகை மாதம் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை (13.12.2024) ஹிஜ்ரி 1446, ஜ.ஆகிர் -11, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.40











## – அரிசிக்கு வரி குறைப்பில்லை –

# இறக்குமதிகள் இரத்தாகின!

## வர்த்தக அமைச்சர் நடத்திய பேச்சும் தோல்வி



நா.தினுஷா

அரிசி இறக்குமதிக்கான தீர்வை வரியை குறைக்குமாறு வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் வசந்த சமரசிங்கவிடம் இறக்குமதியாளர்கள் சங்கத்தினால்... » 02 பக்கம்



# தொடர் காய்ச்சல் இருந்தால் உடனடியாக சிகிச்சை பெறுக!

## தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு அவசர அறிவிப்பு

» 02பக்கம்

# அரிசித் தட்டுப்பாடு விரைவில் நீங்கும்

## அமைச்சர் சமரசிங்க திட்டவட்டம்

''அரிசி இறக்குமதிக்கான வரையறைகளை எதிர்வரும் 20ஆம் திகதிவரை நீக்கியுள்ளோம். அதற்காக இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான 65 ரூபா வரியை நீக்க முடியாது. எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் சந்தையில் ஏற்பட்டுள்ள அரிசி நெருக்கடிக்குத் தீர்வு கிடைக்கும். அதற்கமைய, மீண்டும் அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்க மாட்டோம்'' என்று வர்த்தக, வாணிப,.... » 02 பக்கம்

# ஐ.ம.ச. தேசியப்பட்டியல் இறுதி செய்யப்பட்டது



ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாக மனோ கணேசன், நிஸாம் காரியப்பர், சுஜீவ சேனசிங்க, மொஹம்மட் இஸ்மாயில் முத்து மொஹம்மட் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கட்சியின் பொதுச் செயலாளரால் இந்த பெயர்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இம்முறை நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு 05 தேசியப்பட்டியல் ஆசனங்கள் கிடைத்திருந்தன. ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தேசியப்பட்டியல் உறுப்பினராக இதற்கு முன்னர் பெயரிடப்பட்டிருந்தார்.

# 20 சட்டங்கள் தொடர்பில் மறுபரிசீலனை

## நீதி அமைச்சர் அறிவிப்பு



''பயங்கரவாத தடைச் சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பவற்றை விரைவாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நம்புகிறேன். அதற்கான பணிகளை ஆரம்பித்துவிட்டோம். அதேபோன்று, பாராளுமன்றத்தில் சட்டமூலங்களாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20 வரையான சட்டங்கள் தொடர்பில் மறுபரிசீலனை செய்யவும் திட்டமிட்டுள்ளோம்'' என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார். » 02 பக்கம்

# சாலி கைது சட்டவிரோதம்

## -நீதிமன்றம் தீர்ப்பு-

மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி கைது செய்யப்பட்டமை சட்டவிரோதமானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதற்கு நட்டஈடாக 75,000 ரூபா பணத்தை பிரதிவாதிகள் செலுத்த வேண்டும் எனவும் நீதிமன்றம் நேற்று (12) உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் (CID) பணிப்பாளர் ஆகியோர் இந்த வழக்கின் பிரதிவாதிகள் ஆவர். 2021 மார்ச் 09 அன்று செய்தியாளர் சந்திப்பில் மதங்களுக்கு இடையே முறுகலை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அசாத் சாலி 2021 மார்ச் 16 அன்று கைது செய்யப்பட்டார்.

ஒன்பது மாதங்களின் பின்னர் கொழும்பு உயர்நீதிமன்றத்தினால் 2021 டிசம்பர் 02 அன்று அவர் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# அரசியலமைப்பு பேரவை அடிப்படை உரிமை மீறலில்?

## எதிர்மனு உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி



மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் நீதிபதி நிஷ்ஷங்க பந்துல கருணாரத்னவை உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிப்பதற்கு ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரையை நிராகரித்ததன் மூலம் சபாநாயகர் உள்ளிட்ட அரசியலமைப்பு பேரவை அடிப்படை உரிமையை மீறியுள்ளதாக தீர்ப்பளிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு உயர்நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி, குமுதினி விக்ரமசிங்க ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு... » 02 பக்கம்

# மு.கா.கோரிக்கைக்கு தடையுத்தரவு



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நிசாம் காரியப்பரின் பெயரின்றி ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் பட்டியலை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதை தடுத்து இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

## கமெண்ட் கந்தர்...



கோட்டாவுக்கும் அரிசியால தான் பாருங்கோ கேடு ஆரம்பிச்சது...

# தேங்காய் எண்ணெய் விலை உயர்கிறது



தேங்காய் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து, இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் விலை 800 ரூபா வரையிலும் தேசிய உள்நாட்டு தேங்காய் எண்ணெய் விலை 750 ரூபா வரையிலும் அதிகரித்துள்ளதாக தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

மத்திய வங்கியின் விலைப்பட்டியலுக் கமைய, நேற்று முன்தினம் (11) 741 ரூபா முதல் 747 ரூபா வரையில் விற்பனை செய்யப் பட்டுள்ளது. » 02 பக்கம்

# மின்சார சபையின் கடனில் ரூபா. 333 பில். நிலுவை



மின்சார சபைக்கு இலாபம் கிடைக்கப்பெற்றிருந்தாலும், பல்வேறு பிரிவுகளிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்களில் இன்னும் 333 பில்லியன் ரூபா மீள செலுத்த வேண்டியுள்ளது. அதன் அடிப்படையிலேயே தற்போது நடைமுறையிலுள்ள கட்டண முறையை எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு அவ்வாறே நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக மின்சாரத்துறை மறுசீரமைப்பு செயலணியின் பணிப் பாளர் நாயகம்... » 02 பக்கம்

## அரிசித் தட்டுப்பாடு

உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார். கொழும்பில் நேற்று (12) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''விவசாயத்தையும் நுகர்வோரையும் பாதுகாத்துக்கொண்டு அரிசி பிரச்சினைக்கு தீர்வைக் காண பல்வேறு தீர்மானங்களை எடுத்தோம். நாட்டில் போதுமானளவு அரிசி உற்பத்தி இருப்பதாகவே கடந்த காலங்களில் விவசாயத் திணைக்களம், நெல் கொள்முதல் சபை, நுகர்வோர் அதிகார சபையிடமிருந்து கிடைத்த தரவுகளில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இந்த சகல தரவுகளையும் பரிசீலித்தால் மேலதிக நெல் உற்பத்தி நாட்டில் இருக்கிறது. ஆனால் சந்தையில் நெல்லுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக அரிசி ஆலை உரிமையாளர்களை அழைத்து அரிசியை சந்தைக்கு விடுவிக்குமாறு கூறினோம்.

அதிக இலாபத்தை உழைக்க முயற்சிக்க வேண்டாம் என்றும் கூறினோம். கட்டுப்பாட்டு விலையின் அடிப்படையில் அரிசியை சந்தைக்கு விநியோகித்து வருகிறார்கள். அதேபோன்று, அரிசி ஆலை உரிமையாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய சதொசவுக்கு நாளாந்தம் 300 மெற்றிக் தொன் அரிசி விநியோகிக்கப்படுகிறது. அதற்கு மேலதிகமாக 10 மெற்றிக் தொன் அரிசி பிரதான அரிசி ஆலை உரிமையாளர்களினூடாக சந்தைக்கு விநியோகிக்கப்படுகிறது.

மேலும், எதிர்வரும் 20ஆம் திகதிவரை அரிசி இறக்குமதிக்கான வரையறையை நீக்கியுள்ளோம். அதற்கமைய, நாட்டுக்கு அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. துறைமுகத்தில் அரிசி இருப்பில் இருக்கிறது. நேற்றிலிருந்து (நேற்று முன்தினம்) துறைமுகத்திலிருந்து அரிசியை விடுவிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 25,000 – 50,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாகவே, 70,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டது. அதில் 5,200 மெற்றிக் தொன் அரிசியை விலைமனுக் கோரல் மூலம் நாட்டுக்கு கொண்டுவர தீர்மானித்தோம்.

15 – 20ஆம் திகதிக்கு இடையில் ஒருதொகை அரிசியும் 20 – 24ஆம் திகதிக்கு இடையில் ஒருதொகை அரிசியும் கிடைக்கும். இரண்டாவது தொகைக்கான விலைமனுக்கோரலும் இடம்பெற்றுள்ளது. 260 ரூபாவுக்கு அரிசி விற்பனை செய்யப்பட்டபோது நெல் மூடையின் விலை 9,000 – 9,500 ரூபாவாக இருந்தது. இருப்பினும் அரிசி விலையை அதிகரிக்க நாங்கள் இடமளிக்கவில்லை.

அதேபோன்று இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு 65 ரூபா வரி அறவிடப்படுகிறது. அந்த வரியை நீக்குமாறு இறக்குமதியாளர்கள் கோரினார்கள். அதற்கும் இடமளிக்கவில்லை. விவசாயிகளின் பாதுகாப்புக் கருதியே இறக்குமதி அரிசிக்கு 65 ரூபா வரி அறவிடப்படுகிறது. அதன் காரணமாகவே, 260 ரூபாவுக்கு விற்பனையான ஒரு கிலோ நாட்டரிசிக்கான விலையை 230 ரூபா என்ற அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்திருக்கிறோம். அந்த சில்லறை விலையிலேயே அரிசி சந்தைக்கு விநியோகிக்கப்படுகிறது. இன்னும் ஒன்றரை மாதங்களில் நெல் அறுக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். அதன் பின்னர் அந்த அரிசி சந்தைக்கு வர இரு மாதங்களாவது ஆகும். அதுவரையில் பாவனைக்கு போதியளவு அரிசி இன்மையின் காரணமாகவே அதற்கு பொருத்தமான தொகையில் அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் சந்தையில் ஏற்பட்டுள்ள அரிசி நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். மீண்டும் அரிசி இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்க மாட்டோம். மீண்டும் இந்த நிலைமை ஏற்படுவதற்கு இடமளிக்க மாட்டோம்'' என்றார்.

## தேங்காய்...

அந்த விலைப் பட்டியலுக்கமைய கடந்த ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி 694 ரூபாவுக்கு விற்பனையான தேங்காய் எண்ணெய் தற்போது 750 ரூபா வரையில் விற்பனையாவதாக தரவுகள் குறிப்பிடுகின்றன.

அந்த விலைப்பட்டியலுக்கமைய நேற்று முன்தினம் தேங்காய் ஒன்று 195 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், தேங்காய் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து தேங்காய் எண்ணெய் உற்பத்தியும் நெருக்கடியை சந்தித்துள்ளதாக உற்பத்தியாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தேங்காய் ஒன்றுக்கு சந்தையில் நிலவும் விலையின் அடிப்படையில், தேங்காயை கொள்வனவு செய்து தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்வதால் தமக்கு இலாபம் கிடைக்காது என்று தேசிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதன் காரணமாக, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ தேங்காய் எண்ணெயின் விலை 800 ரூபா வரையில் அதிகரித்துள்ளதாக அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பிரதான ஒருங்கிணைப்பாளர் புத்திக த சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

## 20 சட்டங்கள் தொடர்பில்...

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற மாநாடொன்றின்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முறையின் மீது நம்பிக்கையை கட்டியெழுப்புவது என்பது அரசாங்கம் என்ற அடிப்படையில் எங்களுக்கு சவாலை ஏற்படுத்தியுள்ளது. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் மீது மீண்டும் நம்பிக்கையை கட்டியெழுப்ப வேண்டும். அது அவ்வளவு இலகுவான விடயமல்ல. இந்த நிறுவனங்கள் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை தற்போது இல்லாமல் போயுள்ளது. அதில் மக்களின் தவறு எதுவும் இல்லை. எங்களால் முன்னெடுக்கவுள்ள வேலைத்திட்டங்களினூடாக இந்த நிறுவனங்கள் மீதான நம்பிக்கையை கட்டியெழுப்பவே நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்கள் மேலும் விரிவாக்கப்பட வேண்டும். அதேபோன்று வெளிப்படைத்தன்மையும் இருக்கவேண்டும். நீதிக்காக மேலும் பல விடயங்களை தவிர்க்க வேண்டிய நிலைமையிலேயே நாங்கள் இருக்கிறோம். சட்டங்கள் மறுசீரமைப்பு செய்யப்படவேண்டும். அதேபோன்று அவற்றை முறையாக பயன்படுத்த வேண்டும். இருந்தபோதும் மக்கள் மத்தியில் எண்ண அடிப்படையிலான மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

அந்த மாற்றத்தினூடாக அநேகமாக விடயங்களை பார்க்கும் தன்மையில் மாற்றம் ஏற்பட வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பவற்றை விரைவாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நம்புகிறேன். ஆரம்பத்திலிருந்து பணிகளை முன்னெடுக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு இல்லை. தற்போது வரையில் அநேகமான பணிகளை நிறைவு செய்துவிட்டோம். அதேபோன்று, பாராளுமன்றத்தில் சட்டமூலங்களாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20 வரையான சட்டங்கள் தொடர்பில் மறுபரிசீலனை செய்வோம். எங்களுக்கும் மக்களின் பெரும்பான்மை விருப்பம் கிடைத்துள்ளது. அதற்காக நாங்கள் தன்னிச்சையான தீர்மானம் எடுப்போம் என்று கூறவில்லை. நாங்கள் எந்தத் தீர்மானம் எடுத்தாலும் சகலருடனும் கலந்துரையாடியதன் பின்னரே தீர்மானம் எடுப்போம்'' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## தொடர் காய்ச்சல்...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் திடீர் காய்ச்சலினால் 07 பேர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், எலிக்காய்ச்சலினாலேயே இந்த மரணங்கள் சம்பவித்துள்ளதாக மருத்துவப் பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் அங்கு எலிக்காய்ச்சல் பரவும் வீதம் அதிகரித்துள்ளது. அதற்கமைய, இவ்வாறு உயிரிழந்த எழுவரும் 28 - 62 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் என்பதுடன் அவர்கள் யாழ்ப்பாணத்தை அண்மித்துள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் 40 வரையான நோயாளர்கள் தங்கி சிகிச்சைப் பெற்று வருவதாக தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் வைத்தியர் துஷானி தம்பரேரா தெரிவித்தார்.

இதுதொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் நேற்று (12) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்து விளக்கமளிக்கையில்,

உயிரிழந்த 07 பேரினதும் மரபணு மாதிரிகள் வைத்தியப் பரிசோதனை நிறுவனம் மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலை ஆய்வுக் கூடத்துக்கு அனுப்பி பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அவற்றில் அநேகமான மரபணு மாதிரிகள் எலிக்காய்ச்சல் மற்றும் லெப்டோஸ்பிரோசிஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று, இன்புளுவென்சா அல்லது வேறு நோய்களின் தாக்கமும் இதில் இருக்கிறதா என்பது தொடர்பிலும் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் நிலவிய காலநிலை மற்றும் தரவுகளின் அடிப்படையில் இவர்களுக்கு எலிக்காய்ச்சல் ஏற்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கும். இது பக்றீரியாவினூடாக பரவும் நோய் என்பதுடன் எலி, மாடு போன்ற விலங்குகளால் மனிதர்கள் மத்தியில் பரவலடைகிறது.

கடந்த காலங்களில் யாழ். மாவட்டத்தில் வெள்ள அபாயம் காணப்பட்டதால், பக்றீரியா கலந்த நீரினால் லெப்டோஸ்பிரோசிஸ் நோய் இவ்வாறு பரவலடைந்திருக்கலாம் என்று கருதுகிறோம். உடம்பிலுள்ள வெட்டுக்காயங்கள், புண்கள் காணப்பட்டால் இந்த பக்றீரியா உடம்புக்குள் உட்புகும். அத்தோடு, சுத்தமற்ற நீரில் நீராடுவது, வாய், கண் போன்ற பகுதிகளை சுத்தம் செய்வதனூடாகவும் இந்த பக்றீரியா உடம்புக்குள் உட்புக முடியும். இந்த பக்றீரியா உடலுக்குள் ஊடுருவி 14 - 21 நாட்களுக்கு இடையில் கடும் காய்ச்சல், தசை வலி, தலைவலி, கண் சிவத்தல் போன்ற நோய் அறிகுறிகள் தென்படுமாக இருந்தால் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறவேண்டியது அவசியமாகும்.

பருவப்பெயர்ச்சி மழை மற்றும் நெல் விளைச்சல் காலம் என்பதால் டிசம்பர் மாதத்தில் பொதுவாக எலிக்காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தே காணப்படும். யாழில் அடையாளம் காணப்பட்ட நோயாளர்கள் மத்தியில் சுவாசிப்பதில் கடினத்தன்மையானது பொதுவான நோய் அறிகுறியாக இருந்தது. அதன் காரணமாக, எலிக்காய்ச்சல் மற்றும் இன்புளுவென்சா நோய் நிலைமையா என்பது தொடர்பில் சந்தேகிக்க நேர்ந்தது. மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் நிலைமை இருந்தால் கட்டாயம் இரத்தப் பரிசோதனை செய்துகொண்டு வைத்தியர் ஒருவரை சந்திக்க வேண்டியது அவசியமாகும்.

இந்த நோயினால் மரணம் சம்பவிப்பதற்கான அதிக வாய்ப்புகள் இருக்கின்றன. இருந்தபோதும் சிகிச்சையினால் குணப்படுத்தவும் முடியும். முறையாக சிகிச்சையை பெற்றுக்கொள்ளாவிட்டால் முழு உடல் உறுப்புகளையும் பாதிப்புறச் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த நோயினால் உயிரிழந்திருப்பவர்கள் இதற்கு முன்னர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் இல்லை. இருந்தபோதும் உரிய நேரத்துக்கு வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளாமையினால் இவ்வாறு மரணித்திருக்கலாம் என்று கருதுகிறோம்.

பொதுவாக 10,000 வரையிலானவர்கள் எலிக்காய்ச்சலினால் பாதிப்படைகிறார்கள். தற்போது வரையில் 12,000 பேர் வரையில் பாதிப்படைந்துள்ளனர். 100 - 200 இற்கும் இடையிலான மரணங்களும் பதிவாகலாம். விசேடமாக இரத்தினபுரி, காலி, மாத்தறை, குருநாகல், மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களிலேயே எலிக்காய்ச்சலினால் நோயாளர்கள் அதிகளவில் பாதிப்படைகிறார்கள். ஆனால், யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு கிழக்கு பிரதேசங்களில் நோயாளர்கள் அடையாளம் காண்பது அரிது. ஆயினும் கடந்த காலங்களில் இடம்பெற்ற மழைவீழ்ச்சியின் காரணமாக அந்தப் பிரதேசங்களிலுள்ள மக்களும் எச்சரிக்கைக்குரியவர்களாக மாறியுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் முழுவதும் இந்த நோய் நிலைமை பரவலடையவில்லை. மூன்று சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் மாத்திரமே இந்த நோயின் பரவல் நிலை காணப்படுகின்றது. நோய் நிலைமையில் அதிகரிப்பு ஏற்பட்டால் மரபணு மாதிரிகளை கொழும்பு, கண்டி அல்லது அநுராதபுரம் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும். யாழ்ப்பாணத்தை அண்மித்துள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகங்களில் இதுவரையில் 40 வரையான நோயாளர்கள் தங்கி சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். 28 - 62 வயதுக்கு இடைப்பட்டவர்களே இவ்வாறு உயிரிழந்திருக்கிறார்கள். நோயாளர்களின் வயதெல்லையும் இதற்குள்ளேயே உள்ளடங்குகின்றன. உயிரிழந்த நபர்களில் விவசாயம் செய்பவர்கள் இல்லை என்றாலும் வயல்களை அண்மித்த பிரதேசங்கள் மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட இடங்களில் எலிக்காய்ச்சல் அதிகரித்துள்ளது'' என்றார்.

## அரிசிக்கு வரி குறைப்பில்லை...

முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அமைச்சர் நிராகரித்துள்ள நிலையில் அரிசி இறக்குமதிக்கு தொடர்ந்தும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

அமைச்சர் வசந்த சமரசிங்கவுடனான பேச்சுவார்த்தையின்போது இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான தீர்வை வரியை 15 - 20 ரூபாவாக குறைக்குமாறு இறக்குமதியாளர்கள் கோரியுள்ளதுடன் அவ்வாறு இல்லாவிட்டால் அரிசி விற்பனை விலையை அதிகரிக்குமாறு யோசனை முன்வைத்துள்ளனர்.

ஆயினும், வரி குறைப்பு அல்லது விலை அதிகரிப்பை மேற்கொள்ள முடியாது என்று தெரிவித்து இறக்குமதியாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அமைச்சர் நிராகரித்ததைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் (11) வர்த்தக அமைச்சில் இறக்குமதியாளர்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்துள்ளது.

இந்தப் பின்னணியில், தாம் அரிசி இறக்குமதி செய்யப் போவதில்லை என இறக்குமதியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள். மேலும், அரிசி விலை அதிகரிப்புக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இடமளிக்கமாட்டார் என்றும் எதிர்வரும் 20 ஆம் திகதியின் பின்னர் அரிசி இறக்குமதி செய்யப் போவதில்லை என்றும் இறக்குமதியாளர்களுக்கு அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

இந்தப் பேச்சுவார்த்தையை தொடர்ந்து இறக்குமதி செய்வதற்காக முன்வைக்கப்பட்டிருந்த கொள்முதல் செயற்பாடுகளை இரத்துச் செய்ய இறக்குமதியாளர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியமுடிகிறது. இறக்குமதியாளர்களால் கொள்முதலுக்கு கோரப்பட்டிருந்த 75 - 80 வரையாக அரிசி கொள்கலன்கள் இவ்வாறு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இருந்தபோதும் இறக்குமதியாளர்களால் இதற்கு முன்னர் இறக்குமதிக்காக கோரப்பட்டிருந்த அரிசி தொகை இந்த வார இறுதியில் நாட்டை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்யும் சங்கத்தினரால் அரிசி இறக்குமதி செய்யாவிட்டால் சிறியளவான இறக்குமதியாளர்களுக்கு அந்த வாய்ப்பை வழங்கவும் சிறிய இறக்குமதியாளர்களினூடாக அரிசி இறக்குமதி செய்வது தொடர்பில் பின்னர் கலந்துரையாடவுள்ளதாகவும் வர்த்தக அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதற்கமைய, அரிசி இறக்குமதிக்கான தீர்வை வரியை குறைத்தல் அல்லது அரிசி விலையை குறைப்பது தொடர்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அமைச்சர் வசந்த சமரசிங்க நிராகரித்துள்ளதாகவும் தற்போது வரையில் அரிசியை இறக்குமதி செய்து நாட்டுக்கு வரவழைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அத்தியாவசியப் பொருள் இறக்குமதியாளர்களின் சங்கத்தின் உறுப்பினர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், உள்நாட்டு அரிசி உற்பத்தியாளர்களிடமும் அரிசி உற்பத்திக்கான நெல்லுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் வர்த்தக நிலையங்களில் இருக்கும் அரிசி தொகைக்கு எதிர்வரும் ஓரிரு நாட்களில் தட்டுப்பாடு ஏற்படலாம் எனவும் உள்நாட்டு அரசி உற்பத்தியாளர்கள் கூறியிருக்கிறார்கள். மரந்தகஹமுல மொத்த அரிசி விற்பனை நிலையத்துக்கு அரிசி ஆலை உரிமையாளர்களிடம் இருந்து அரிசி கிடைப்பதில்லை என்றும் இருப்பில் இருக்கும் நெல் கிடைத்தால் அரிசி உற்பத்தியை மீண்டும் ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் மரந்தகஹமுல சிறிய மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் பீ.கே. ரஞ்சித் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# யாழில் சோலார் அனுமதி வழங்கலில் முறைகேடு

## பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்க பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு பணிப்பு

யாழ்ப்பாணத்தில் பெரும் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் சோலார் அனுமதி வழங்கல் தொடர்பில் இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாணப் பிராந்திய பொறியியலாளர் அலுவலகம் தவறிழைத்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ள இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, பாதிக்கப்பட்ட பாவனையாளருக்கு உடனடியாக நீதி வழங்குமாறும் பணிப்புரை விடுத்துள்ளது.

மேலும், பாவனையாளர் ஒருவருக்கு இணைப்பு அனுமதி வழங்குவதற்காகப் பாவனையாளரிடமிருந்து பணம் அறவிடப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படும் உள்ளக சுற்று நிரூபங்கள் அல்லது பொது நடைமுறைகள் மற்றும் ஆவணங்கள் ஏதுமிருப்பின் அது பற்றித் தங்களுக்கு அறியத்தருமாறும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பாவனையாளர் விவகாரங்களுக்கான பணிப்பாளர் யசந்த ரதுவிதான இலங்கை மின்சார சபையின் பிரதம பொறியியலாளரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - சுன்னாகம் வாரியப்புலம் பகுதியைச் சேர்ந்த மின் பாவனையாளர் ஒருவர் 2023 ஆண்டு விண்ணப்பித்த போது, அவருக்கு அனுமதி வழங்காமல், 2024 ஆம் ஆண்டு விண்ணப்பித்த அதே இடத்தைச் சேர்ந்த மற்றொருவருக்குச் செல்வாக்கின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்படாத கட்டடத்துக்கு அனுமதி வழங்கியமை தொடர்பாகச் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, அவருக்கு அனுமதியை வழங்குமாறு பணிக்கப்பட்ட பின்னரும், இணைப்புக்காக ரூபா 11 இலட்சம் செலுத்துமாறு கோரியமையை ஆதாரங்களுடன் மேன்முறையீடு செய்ததை அடுத்தே இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, யாழ்ப்பாணம் பிராந்திய மின் பொறியியலாளருக்கு இவ்வாறு பணித்திருக்கிறது.

சுன்னாகத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகத்தில் சோலார் அனுமதி பெறுவதற்காக விண்ணப்பிப்பவர்களுள் பலருக்கு அனுமதி வழங்கப்படாமை, அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு மீற்றர் பொருத்துவதில் பாரபட்சம் காட்டுதல் போன்ற முறைகேடுகள் குறித்து இலங்கை மின்சார சபையின் தலைமை அலுவலகத்துக்கும் மின் சக்தி வலு அமைச்சுக்கும் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கும் இது வரை பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

எனினும், இலங்கை மின்சார சபை அவற்றைக் கண்டும் காணாமல், முறையற்ற விதத்தில் பல அனுமதிகள் வழங்கப்பட்டமை தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தின் கவனத்தக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக அனுமதியை வழங்குமாறு உத்தரவிடப்பட்ட போதும், பிராந்திய மின் பொறியியலாளர் அவை குறித்து கவனமெடுக்காமல் தொடர்ந்தும் முறையற்ற விதத்தில் சோலார் அனுமதிகளை வழங்கி வந்துள்ளார்.

அதைவிட, அனுமதி வழங்கப்பட்டவர்களுக்கு மீற்றர்களைப் பொருத்துவதிலும் முறைகேடாக நடந்து கொண்டுள்ளார் என்று பாவனையாளர்கள் பலர் முறைப்பாடு செய்துமிருந்தனர்.

இதேநேரம் - இணைப்புக்கான அனுமதி வழங்கல் தொடர்பில் சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மின்வலுசக்தி அமைச்சரிடம் நேற்று நேரடியாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில், அனுமதிக்கு விண்ணப்பித்த ஒழுங்கு, அனுமதிக்காகப் பணம் செலுத்திய ஒழுங்கு, அனுமதி வழங்கப்பட்ட ஒழுங்கு உட்பட முறைகேடுகள் நடந்துள்ளன என்பதை உறுதிப்படுத்தக் கூடிய தகவல்களை இலங்கை மின்சார சபையிடமிருந்து தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக வாடிக்கையாளர்கள் பலர் கேட்டிருந்த போதிலும் இது வரை அத்தகைய தகவல்கள் எவையும் வழங்கப்படவில்லை என்பதுவும் குறிப்பிடத்தக்கதாகும்.

## பினாரா மூலிகையை வைத்திருந்த இஸ்ரேலியப் பெண்ணுக்கு அபராதம்

எம்.ஏ.அமீனுல்லா

அருகிவரும் பினாரா என்ற ஒருவகை மூலிகை செடியை வைத்திருந்த இஸ்ரேலிய பெண் ஒருவருக்கு கண்டி நீதவான் நீதிமன்றினால் 80000 ரூபா அபராதம் நேற்று (12) விதிக்கப்பட்டது.

36 வயதான இஸ்ரேலியப் பெண் கம்பளை வன அதிகாரி அலுவலகத்தினால் நேற்று முன்தினம் (11) மாலை 4.30 மணியளவில் ஹந்தான காட்டில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் நேற்று (12) ஆஜர்படுத்தப்பட்ட போது அபராதம் விதிக்கப்பட்டதுடன், குறித்த அபராதத் தொகையை செலுத்தியதும் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அபராதம் செலுத்திய பின்னர், நீதிமன்ற பாதுகாப்பில் இருந்த இஸ்ரேலிய பெண்ணின் கடவுச்சீட்டும் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப் பட்டுள்ளது.

## பேருவளையில் இலவச சட்ட ஆலோசனை சேவை

பேருவளை பி.எம்.முக்தார்

கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட மனித உரிமைக்கான கற்கை நிலையம் மற்றும் சட்ட உதவி பிரிவு இணைந்து வழங்கும் இலவச சட்ட ஆலோசனை சேவை எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை பேருவளை மாளிகாஹேன ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

இந்த இலவச சட்ட ஆலோசனை சேவையில் அனைத்து விதமான சட்ட பிரச்சினைகளுக்கும் ஆலோசனை வழங்கப்படும்.

இந்த இலவச சட்ட ஆலோசனை சேவை மூலம் இப்பகுதி மக்கள் பயனடைய முடியும். இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள 070-7306100 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

## மின்சார சபையின்...

பொறியியலாளர் புபுது நிரோஷன் தெரிவித்தார்.

மின் கட்டணத் திருத்தம் தொடர்பான அறிக்கை டிசம்பர் மாதம் 06ஆம் திகதி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டது. அதில் தற்போது நடைமுறையில் இருக்கும் கட்டண சூத்திரத்தை 2025ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கு அவ்வாறே தொடர்வதற்கு யோசனை முன்வைத்திருக்கிறோம். எனவே, அந்த ஆறு மாத காலப்பகுதியில் கட்டண அதிகரிப்போ குறைப்போ இடம்பெறாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (12) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

எதிர்வரும் ஜனவரி மாதம் 15 – 18ஆம் திகதிக்கு இடையில் மின் கட்டணம் தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அதன் நிலைப்பாட்டை முன்வைக்கும். அடுத்த வருடத்தின் முதலாவது ஆறு மாதங்களில் செலவுகளுக்காகவும் கடன் மீள் செலுத்துகைக்காகவும் 268 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்யவேண்டியுள்ளது. எனவே தற்போதுள்ள கட்டண முறையையே எதிர்வரும் ஆறு மாதங்களுக்கும் நடைமுறைப்படுத்தினால் மின்சார கேள்வி நிலைக்கேற்ப, 229 பில்லியன் ரூபா வருமானத்தை அடைய முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

39 மில்லியன் ரூபா நிதிப் பற்றாக்குறையும் இருக்கிறது. 2014ஆம் ஆண்டிலிருந்து 2022ஆம் ஆண்டு வரையில் மின் கட்டணத் திருத்தம் இடம்பெறவில்லை. பல்வேறு பிரிவுகளிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்களில் இன்னும் 333 பில்லியன் ரூபா மீள செலுத்த வேண்டியுள்ளது. 2024ஆம் ஆண்டு இடம்பெற்ற கட்டணக் குறைப்பின் போது மின் கட்டணத்தை குறைக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தோம். மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான அமைச்சரவை யோசனையொன்றை முன்வைக்கவும் எதிர்பார்த்திருக்கிறோம். எதிர்வரும் மார்ச் மாத இறுதிக்கு முன்னர் அந்தச் சட்டம் எவ்வாறு அமுலாகும் என்பதை அறிவிப்போம். மே மாத இறுதிக்குள் அந்தச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளக்கூடியதாக இருக்கும்'' என்றார்.

## அரசியலமைப்பு பேரவை...

நேற்று(12) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சட்டத்தரணி பதிரத்னவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. கடந்த ஏப்ரல் 30ஆம் திகதி மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை உறுதிசெய்வதற்கு அழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பிரதம நீதியரசரைத் தவிர உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவரை நியமிக்கவோ அல்லது முன்மொழியவோ ஜனாதிபதிக்கு தடை விதித்து இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

எனினும், முறையான நடைமுறைகளைப் பின்பற்றாது ஜனாதிபதியால் உயர் நீதிமன்றத்துக்கு பரிந்துரைக்கப்பட்ட நீதியரசரின் நியமனத்தை அரசியலமைப்பு பேரவை நிராகரித்ததன் மூலம், அரசியலமைப்பின் 12/1 சரத்தின் கீழ் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதா என்பதை ஆராய்வதற்கு நீதியரசர்கள் குழாம் விசாரணைக்கான அனுமதியை வழங்கியது.

அதற்கமைய, மனு மீதான விசாரணையை ஜூலை 25ஆம் திகதி நிறைவு செய்த நீதியரசர்கள் குழாம், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நிஷ்ஷங்க பந்துல கருணாரத்னவை உயர்நீதிமன்ற நீதியரசராக நியமிப்பதற்கு அரசியலமைப்பு பேரவையிடம் முன்வைக்கப்பட்ட பரிந்துரையை நிராகரிப்பதற்கு அரசியலமைப்பு பேரவையின் பெரும்பாலான உறுப்பினர்கள் எடுத்த தீர்மானம் சரியானதென நீதியரசர்கள் குழாம் நேற்று(12) உத்தரவிட்டது.

இதனால் அரசியலமைப்பு பேரவையின் தீர்மானத்துக்கமைய அரசியலமைப்பு மீறப்படவில்லை என உத்தரவிட்ட நீதியரசர்கள் குழாம், 20 இலட்சம் ரூபா வழக்கு கட்டணத்துக்கு உட்பட்டு மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்துள்ளது. சட்ட மா அதிபர், சபாநாயகர், பிரதமர், அரசியலமைப்பு பேரவை உள்ளிட்ட பிரதிவாதிகள் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்கா டி சில்வா ஆஜரானார். மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா முன்னிலையானார்.

# தினசரி பலாபலன்கள்

## குரோதி வருடம் கார்த்திகை மாதம் 28ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்** தேவையற்ற கவலைகளை விட்டு விட்டு மகிழ்ச்சியுடன் இருங்கள். உடல் நலத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள்.

**ரிஷபம்** வீணான டென்ஷன் வேண்டாம். உங்கள் பணம் பொருட்களை பத்திரப் படுத்திக்கொள்ளுங்கள்.

**மிதுனம்** தொட்டது துலங்கும் நாள். மன அமைதியுடன் அனைத்தையும் சாதிப் பீர்கள். வெற்றியுடன் வீடு திரும்புவீர்கள்.

**கடகம்** பயணங்களால் சிரமங்களை அனுபவித் தாலும் தேவைக்கான பண வரவு உண்டு. சுறுசுறுப்பாக செயற்படுங்கள்.

**சிம்மம்** எதிர்பாராத சுப செய்தியால் மன மகிழ்ச்சி கொள்வீர்கள். தெய்வ தரிசனம் செய்து கொள்வீர்கள்.

**கன்னி** மௌனம் காப்பதே சிறந்தது. யாருடனும் விதண்டா வாதம் செய்யவேண்டாம். கோபத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

**துலாம்** உடல், மனம் சோம்பிக் காணப்படும். வீண் டென்ஷன் வேண்டாம். தொழில் விடயத்தில் அக்கறையோடு செயற்படுங்கள்.

**விருச்சிகம்** தொழிலிடத்திலுள்ள பெண் உத் தியோகத்தர்களால் இலாபங்கள் உண்டு. காதல் களியாட்டங்களில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு** தேவைக்கேற்ப பணம் ஏதோ வழியில் வந்து மகிழ்விக்கும். குழப்பமற்ற மனதுடன் சேவையாற்றுவீர்கள்.

**மகரம்** திட்டமிட்ட பயணங்களால் இலாபம் உண்டு. தாய் மற்றும் தாய்வழி உதவிகள்,வாகன சுகம் உண்டு.

**கும்பம்** புத்தி சாதுர்யமாக அனைத்திலும் வெற்றி காண்பீர்கள். அத்தியாவசிய செலவுகள் இருக்கும்.

**மீனம்** திடீர் பண வரவுக்கான வாய்ப்புள்ளது. வாதத் திறமையைக் காட்டுவீர்கள். குடும்ப சுகம் உண்டு.

**திதி:**திரயோதசி மு.இ.7.40 வரை பின் சதுர்தசி

**நட்சத்திரம்:**பரணி மு.ப.7.50 வரை பின் கார்த்திகை

**பிறை:**வளர்பிறை

**யோகம் :**மரண யோகம் மு.ப.7.50 வரை பின் சித்த யோகம்

**வார சூலை:**மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது.

**நல்ல நேரம்:**காலை6.13 – 9.13 மணி வரை காலை10.13 – 10.43 மணி வரை பகல்1.13 – 3.13 மணி வரை மாலை5.13 – 6.13 மணி வரை

**ராகு காலம்:**10.43 – 12.13 மணி வரை

**எமகண்டம் :**3.13 – 4.13 மணி வரை

**குளிகை :**7.43 – 9.13 மணி வரை

**சந்திராஷ்டமம்:**கன்னி-துலாம் ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும். (பிற்பகல் 1.19 வரை கன்னி ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முற்பகல் 7.50 மணி வரை**

அஸ்வினி, கார்த்திகை, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**இன்று முற்பகல் 7.50 மணிக்கு மேல்**

பரணி, ரோஹிணி,மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், அத்தம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**

**விஷேட தினம்:**பிரதோஷ விரதம், திருக்கார்த்திகை விரதம், குமாராலய தீபம்



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# நிதிக் கட்டமைப்பைப் பலப்படுத்தி செயற்றிறன்மிக்கதாக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க ஜனாதிபதி அறிவுறுத்து





நாட்டின் நிதிக் கட்டமைப்பைப் பலப்படுத்தி செயற்றிறன் மிக்கதாக மாற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நிதியமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

நிதியமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (12) இடம்பெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு அறிவுறுத்தினார்.

நாட்டின் நிதி நிலைமையை ஸ்திரப்படுத்த சுயாதீன நிறுவனம் என்ற வகையில் மத்திய வங்கியால் மேற்கொள்ளக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறும் அதற்கான ஒத்துழைப்பு மற்றும் வசதிகளை அரசாங்கம் வழங்குமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையின் நிதிச் செயற்பாடுகளை செயற்றிறன் மிக்கதாக்குவதற்கு நல்லதொரு பொறிமுறையை உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பொருளாதாரம் மற்றும் நிதிக் கட்டமைப்புகளின் முழுமையான முன்னேற்றங்களை நெருக்கமாக ஆராய்ந்த பின்னர் மத்திய வங்கியினால் நிதி ஸ்திரமாக்கல் மற்றும் நிதிக் கட்டமைப்பின் ஈடுகொடுக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகள் தொடர்பில் இதன்போது கவனஞ்செலுத்தப்பட்டது.

அதன்படி, நிதிக் கட்டமைப்பில் தற்போதுள்ள பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளை (Macroprudential policy) அமுல்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

பொருளாதாரம் நிலைப்படுத்தப்பட்டவுடன் சொத்துகளின் தரநிலையில் பாதுகாப்பான முன்னேற்றம் மற்றும் முன்மதியின் அடிப்படையில் அவதானத்தை முகாமைத்துவம் செய்துகொண்டு மூலதனத்தைக் கட்டியெழுப்புவதனூடாக நிதிக் கட்டமைப்பில் சாதகமான செயற்றிறன் எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கூட்டத்தில் தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# இரண்டு வருடங்களில் நடத்தப்பட்ட 200 க்கும் மேற்பட்ட மாணவர் பாராளுமன்றக் கூட்டங்கள்

## இது மக்களிடம் நெருக்கமாக்கும் முயற்சி என்கிறார் குஷானி ரோஹணதீர







கடந்த இரண்டு வருடங்களில் 200க்கும் மேற்பட்ட மாணவர் பாராளுமன்றங்களை நடத்தி அதனை மக்களிடம் நெருக்கமாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

நாட்டின் ஜனநாயகக் கட்டமைப்பைப் பாதுகாக்கும் வகையில், பாராளுமன்றத்தின் முக்கியத்துவத்தை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களை எதிர்காலத்தில் செயற்படுத்த எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கல்வியமைச்சில் நேற்று முன்தினம் (11) நடைபெற்ற மேல் மாகாண மாணவர் பாராளுமன்றத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே செயலாளர் நாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அத்துடன், பாராளுமன்றச் செயற்பாடுகள் மற்றும் அதன் பங்கு குறித்து மாணவர்களுக்கு விளக்கமளித்த செயலாளர் நாயகம், பாராளுமன்றம் எவ்வாறு செயற்படுகின்றது என்பது குறித்தும் முழுமையான விளக்கத்தை வழங்கினார்.

மேல் மாகாண மாணவர் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர்களுக்குப் பாராளுமன்ற முறைமையின் நடைமுறை அனுபவத்தை வழங்கும் நோக்கில் மேல் மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இந்நிகழ்வில் மேல் மாகாண பிரதான செயலாளர் தம்மிக்கா கே. விஜேசிங்க, மாகாணக் கல்விப் பணிப்பாளர் பி.ஆர்.தேவபந்து, மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அனுர பிரேமலால் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இங்கு உரையாற்றிய மேல் மாகாண பிரதான செயலாளர் தம்மிகா கே. விஜேசிங்க குறிப்பிடுகையில், மாணவர் பாராளுமன்றத்தினூடாக சமூகத்தில் நிலவும் சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை ஆழமாக ஆராய்ந்து அது தொடர்பான சமூக உரையாடலை உருவாக்குவதன் அவசியத்தை நினைவுபடுத்தினார்.

அதன் பின்னர் மேல் மாகாண மாணவர் பாராளுமன்றத்தின் ஆரம்ப அமர்வை ஆரம்பிக்கும் வகையில் சபாநாயகர் தெரிவு இடம்பெற்றது. அதனையடுத்து பிரதமர் மற்றும் அமைச்சர்கள் மற்றும் அங்கத்தவர்களின் பதவியேற்பு இடம்பெற்றது. பின்னர் மாணவர் பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அமைச்சரும் தங்கள் அமைச்சுகளால் செயற்படுத்த முன்மொழியப்பட்ட திட்டங்கள் குறித்து சபையில் விளக்கினர்.

இதன்போது மாணவர் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவ, மாணவியருக்கு பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் தலைமையில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அதனையடுத்து, மேல் மாகாண மாணவர் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர்கள் பாராளுமன்ற வளாகத்துக்கு அழைக்கப்பட்டு பாராளுமன்ற செயற்பாடுகள் மற்றும் வழிமுறைகள் குறித்து மேலும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும் பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன, சட்டவாக்க சேவைகள் பணிப்பாளரும் தொடர்பாடல் திணைக்கள பதில் பணிப்பாளருமான எம். ஜயலத் பெரேரா ஆகியோரும் கலந்துகொண்டனர். இதன்போது பாராளுமன்றக் குழுக்கள் தொடர்பாக சட்டவாக்க சேவைகள் பணிப்பாளரும் தொடர்பாடல் திணைக்கள பதில் பணிப்பாளருமான எம். ஜயலத் பெரேராவினால் விளக்கமளிக்கப்பட்டது. அத்துடன், பாராளுமன்ற முறைமை தொடர்பில் மாணவர்களுக்கான கேள்விகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டு அவர்களின் சந்தேகங்களும் தீர்த்துவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மேல் மாகாண கல்விப் பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# இன்வெஸ்ட் இந்தியா - சர்வதேச சூரியக்கலக் கூட்டணியின் SolarX Startup சவாலில் இலங்கை நிறுவனங்கள் சாதனை




SolarX Startup சவாலில் (ஆசியா-பசுபிக் பிராந்தியம்) இலங்கையைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையிலான போட்டியாளர்கள் வெற்றிபெற்றுள்ளனர். இன்வெஸ்ட் இந்தியாவுடன் இணைந்து சர்வதேச சூரியக் கல கூட்டணியால் COP 28 இல் தொடங்கப்பட்ட இச்சவால், சூரிய சக்தி துறையில் புதுமையான தீர்வுகளை அடையாளம் கண்டு அவற்றினை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த ஆண்டில் இலங்கை, அவுஸ்திரேலியா, பப்புவா நியூகினியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா மற்றும் ஏனைய நாடுகள் உட்பட ஆசியா-பசுபிக் முழுவதும் உள்ள நிறுவனங்களில் முதல் 20 ஆரம்பநிலை நிறுவனங்களை இச்சவால் திட்டம் அடையாளம் கண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட 20 ஆரம்ப நிலை நிறுவனங்களில் நான்கு இலங்கையைச் சேர்ந்தவை ஆகும். இன்வெஸ்ட் இந்தியா மற்றும் சர்வதேச சூரியசக்தி கூட்டணி ஆகியவற்றுடன் இணைந்து, இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இந்திய உயர் ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்த பயிலரங்கில் இந்த ஆரம்பநிலை நிறுவனங்களுக்கு இச்சவால் குறித்து அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் இப்போட்டிகளில் இலங்கையிலிருந்து பங்கேற்று வெற்றிபெற்ற பின்வரும் வெற்றியாளர்களுக்கு தலா 15,000 அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் வழிகாட்டுதல், முதலீட்டாளர் இணைப்புகள் மற்றும் சந்தை அணுகல் வாய்ப்புகளை உள்ளடக்கிய மேம்படுத்தல் ஆதரவு ஆகியவையும் வழங்கப்பட்டுள்ளன.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2024 டிசம்பர் 13ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# அரசு முன்னுள்ள சவால்கள்!

அரிசி நிர்ணய விலை குறித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் விடுக்கப்பட்ட விசேட நிர்ணய விலை அறிவிப்பை அரிசி ஆலை உரிமையாளர்கள் ஏற்க மறுத்துள்ளதால் சர்ச்சை நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஏற்கனவே வெளியிடப்பட்ட அரிசி நிர்ணய விலை வர்த்தமானியை திருத்தியமைப்பதா அல்லது புதிய வர்த்தமானியை வெளியிடுவதா என்பது தொடர்பில் அரச உயர் மட்டத்தில் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் ஜனாதிபதிக்குமிடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது ஜனாதிபதியினால் அரிசிக்கான நிர்ணய விலையும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, ஒரு கிலோ நாட்டரிசியை 225 ரூபா மொத்த விலைக்கும் 230 ரூபா சில்லறை விலைக்கும் விற்பனை செய்யுமாறும் ஜனாதிபதி அறிவிப்பு வழங்கியிருந்தார். அடுத்த பத்து நாட்களுக்கு அவதானமாக செயற்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி வலியுறுத்தியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து அரிசி நிர்ணய விலைக்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த திங்கட்கிழமை (09) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தலைவர் சமரக்கோனினால் வெளியிடப்பட்டிருந்ததுடன் நிர்ணய விலையின் கீழ் அரிசி விற்பனை செய்யாத வர்த்தகர்களைக் கண்டறிவதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளும் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பமாகியிருந்தன.

இதேவேளை, இந்தியாவிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யும் செயற்பாடுகளிலும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வரி அதிகரிப்பு இதில் தாக்கம் செலுத்தியுள்ளதாகவும் அறியமுடிகிறது. இறக்குமதி செய்யப்படும் அரிசி கிலோவுக்கு 65 ரூபாவை வரியாக அரசு விதித்துள்ளதால் அரிசியை இறக்குமதி செய்து நட்டத்தில் விற்க முடியாதென வர்த்தகர்கள் பலர் கைவிரித்துள்ளனர். இந்நிலையில் அரிசி இறக்குமதிக்காக சமர்ப்பித்திருந்த கோரல்களை வர்த்தகர்கள் பலர் நேற்று இரத்துச்செய்துள்ளதாகவும் அறியக்கிடைத்தது.

அதற்கமைய, அரிசி இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே திட்டமிட்டதன்படி எதிர்வரும் நாட்களில் குறைந்தளவான அரிசியே நாட்டை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், அரசாங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையின் அடிப்படையில் தற்போது இருப்பிலிருக்கும் அரிசியை மாத்திரம் நுகர்வோருக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று தினங்களுக்கு மாத்திரமே விநியோகிக்கக்கூடியதாக இருக்குமென்றும் மரந்தகஹமுல அரிசி மொத்த விற்பனைச் சங்கத்தின் தலைவர் பீ.கே. ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

அரிசியானது இந்தியாவிலும் விலையுயர்ந்துள்ளமை இந்த நிலைமையில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அரிசி விலை மற்றும் இறக்குமதி தொடர்பில் நேற்றுமுன்தினம் வர்த்தக அமைச்சர் நடத்திய பேச்சு தோல்வியில் முடிவடைந்துள்ளது. அதனால் இறக்குமதி வரியைக் குறைக்காத பட்சத்தில் அரிசி இறக்குமதியை செய்வதில் அர்த்தமில்லையெனக் கருதும் அரிசி இறக்குமதியாளர்கள், இந்தியாவில் கொள்வனவுக்கு சமர்ப்பித்திருந்த அரிசிக்கான கோரல்களை இரத்துச் செய்துள்ளனர். இந்த நிலைமை ஆரோக்கியமானதாக இல்லை.

கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியிலிருக்கும்போது இதே வகையான அரிசிப் பிரச்சினையொன்று ஏற்பட்டது. அப்போது கருத்து வெளியிட்டிருந்த இப்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அரிசிப் பிரச்சினையைக்கூடத் தீர்க்கத் தெரியாமல் இறக்குமதிக்கு முயற்சிப்பதாயின் அரசாங்கமொன்று தேவையில்லையெனவும் புறக்கோட்டை வர்த்தகர்கள் இதனைச் செய்வார்களென்றும் கூறியிருந்தார்.

அத்துடன், அரிசி இறக்குமதி செய்யப்படக்கூடாதென்றும் அரிசி ஆலை உரிமையாளர்கள் அரசாங்கத்துடன் இணைந்து கூத்துக்காட்டுவது நிறுத்தப்படவேண்டுமென்றும் அப்போது கூறியிருந்தார் அநுர.

இப்போது அதேமாதிரியான பிரச்சினை வந்திருக்கிறது. ஆனால், எதைச் செய்யக்கூடாது, எப்படி நடக்கக்கூடாது என்று உலகுக்கும் ஊருக்கும் வகுப்பெடுத்த அநுர, அதையே தானும் செய்துகொண்டிருக்கிறார். மக்கள் எல்லாவற்றையும் அவதானித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

அரிசி மட்டுமல்ல, மருந்துப் பொருட்கள்,தேங்காய், உப்பு உட்பட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு வரப்போவதாக சந்தைத் தகவல்கள் சொல்கின்றன. அப்படியானால், வரவு - செலவுத் திட்டத்தை அடுத்த வருட முற்பகுதியில் சமர்ப்பிக்கவுள்ள அரசு புதிய நெருக்கடிகளைச் சந்திக்கப்போகும் அதேசமயம், கனதியான வரவு - செலவுத் திட்டமொன்றும் வரப்போவதையே இந்த நிகழ்வுகள் சுட்டிநிற்கின்றன.

அநுரகுமார அரசாங்கம் அனுபவமற்ற அரசியல்வாதிகளால் சூழ்ந்துகொண்டுள்ளது. சபாநாயகரின் கல்வித் தகைமை முதல் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடுவரை எதிர்பாராத சவால்களைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது இந்த அரசு. அரசாங்கத்துக்கு மக்கள் எதிர்ப்புவரும் என்பது தெரிந்ததுதான். என்றாலும், இந்தளவு விரைவில் அந்த எதிர்ப்பு வருமென்பது எதிர்பார்க்கப்படாதது. அரசு இப்போது சுதாரித்துக்கொண்டு சரியான முடிவுகளை எடுக்காத பட்சத்தில் மேலும் பல சவால்களை எதிர்நோக்கவேண்டியிருக்கும்.

ஒரு கிலோ நெல்லை 156 ரூபா என்ற அடிப்படையிலேயே விவசாயிகளிடமிருந்து சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் கொள்வனவு செய்துள்ளார்கள். எனவே, புதிய விலை நிர்ணயத்துக்கமைய அரிசியை உற்பத்தி செய்து விநியோகிக்க முடியாது. இருந்தபோதும் தற்போது கையிருப்பிலிருக்கும் அரிசியை மாத்திரம் நிர்ணய விலையின் அடிப்படையில் நுகர்வோருக்கு விநியோகிப்போம். இந்த அரிசித்தொகை எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று தினங்களுக்கே போதுமானதாக இருக்கும்.இருந்தபோதும், சந்தையில் நெல்லின் விலையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. ஒரு கிலோ நெல் 130 ரூபா என்ற அடிப்படையில் கிடைத்தால் மாத்திரமே அரசாங்கத்தின் நிர்ணய விலையின் அடிப்படையில் அரிசியை பெற்றுக்கொடுக்கக் கூடியதாக இருக்கும். அவ்வாறில்லாவிட்டால் எதிர்வரும் நாட்களில் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலைகளை மூட நேரிடும். தற்போதிருக்கும் உற்பத்திகளை விற்பனை செய்துவிட்டால் அடுத்த உற்பத்திச் செயற்பாடுகளுக்கு நெல் கிடைக்குமென்று நம்பமுடியவில்லை. நெற்தொகை வைத்திருப்பவர்கள் இன்னும் நெல்லுக்கான விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

மரந்தகஹமுல வியாபாரிகளிடம் இருந்த நெல் தொகையும் ஜனாதிபதியின் அறிவிப்பைத் தொடர்ந்து சந்தைக்கு விநியோகித்து நிறைவு செய்யப்பட்டுள்ளது. நாளாந்தம் சந்தையில் பெற்றுக்கொள்ளப்படும் நெற் தொகை மாத்திரமே இருக்கிறது. சந்தையிலும் நெல்லுக்குத் தட்டுப்பாடு இருக்கிறது. சந்தையில் இருக்கும் ஒரு மூடை நெல் 10,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு நெல்லை கொள்வனவு செய்து அரிசி விற்பனை செய்வதால் வருமானம் எதுவும் கிடைக்காது. தற்போதைய நிலைமையில் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள்.

ஒருகிலோ நெல்லை 156 ரூபாவுக்கு கொள்வனவு செய்து 225 ரூபாவுக்கு அரிசியை விற்பனை செய்வதென்றால் ஒரு கிலோ அரிசிக்கு 30 ரூபா நட்டம் ஏற்படுகிறது. இருந்தபோதும், அசாங்கத்தின் அறிவிப்பின்படி இருப்பிலிருக்கும் அரிசியை விற்பனை செய்து முடிவு செய்வோம். சந்தையில் நெல்லுக்குத் தட்டுப்பாடு இருப்பதாலும் இருக்கும் நெல்லும் அதிக விலைக்கு விற்பனையாகின்றமையினாலும் நெல் இருப்பில் வைத்திருப்பவர்கள் சந்தைக்கு விநியோகிக்காமல் இருப்பதாலும் நெல் வைத்திருப்பவர்களிடம் இருக்கும் நெல்லை சந்தைக்கு விநியோகிக்க அரசாங்கமும் பாவனையாளர் அதிகார சபையும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிலைமை நீடித்தால் அரிசி உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்படும் என்பதுடன் நாட்டில் அரிசிக்கான தட்டுப்பாடும் கடுமையாகும். எதிர்வரும் நாட்களில் அரிசி ஆலைகளை முன்னெடுத்துச் செல்வதென்றால் அரிசி நிர்ணய விலையின் அடிப்படையில் நெல்லை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை, சிறிய கடை உரிமையாளர்களுக்கும் நட்டம் ஏற்பட்டுள்ளது. அதனால், அவர்களால் இந்த நட்டத்தைச் சமாளிக்க முடியாது. எனவே, விற்பனை நிலையங்களிலிருந்து அரிசியை விற்பனை செய்துகொள்வதற்கும் ஐந்து நாட்களாவது வழங்கப்பட வேண்டுமென்று மரந்தகஹமுல அரிசி மொத்த விற்பனைச் சங்கம் அறிவித்துள்ளது.ஆலையிலிருந்து 215 ரூபாவுக்கும் 225 ரூபாவுக்கும் அரிசியை விநியோகித்தும் நேரடியாக சில்லறைக்கடை உரிமையாளர்களுக்கு அரிசி கிடைப்பதில்லை. இடைநிலைத் தரகர்களினூடாகவே அரிசி விநியோகிக்கப்படும். எனவே, ஐந்து ரூபா என்ற அடிப்படையில் போக்குவரத்து வசதிகளை வழங்கி சிறிய கடை உரிமையாளர்களுக்கு அரிசியை விநியோகிக்க முடியாதென்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.



# சிரியாவின் எதிர்காலம்?

மத்திய கிழக்கில் நிலவிவரும் பதற்றத்துக்கிடையே சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல்-அஸாத் தலைமையிலான ஆட்சி கிளர்ச்சியாளர்களால் அகற்றப்பட்டிருப்பதும் நாட்டைவிட்டே அஸாத் வெளியேறி ரஷ்யாவில் தஞ்சமடைந்திருப்பதும் எதிர்பார்க்கப்படாத நிகழ்வு. இரு வாரங்களுக்கு முன்புவரை அஸாத்துக்கு இப்படி ஒரு நிலை வருமென அவருக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவினர் கூட நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள்.

சிரியாவின் முன்னாள் ஜனாதிபதியான ஹாஃபீஸ் அல் - அஸாத்தின் மகனான பஷார் ஜனாதிபதியானதே ஒரு விபத்துத்தான். ஹாஃபீஸுக்குப் பிறகு ஜனாதிபதியாவதற்கு அவருடைய மூத்த மகன் பஸால் தயாராகிவந்த நிலையில், 1994இல் ஒரு விபத்தில் அவர் உயிரிழக்க, லண்டனில் கண் மருத்துவர் படிப்பு படித்துவந்த அஸாத் நாடு திரும்பி இராணுவத்தில் சேர்ந்தார்.

2000இல் ஹாஃபீஸ் உயிரிழந்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி பதவியில் அமர்ந்தார் அஸாத். ஜனாதிபதியாவதற்கு குறைந்தபட்சம் 40 வயது ஆகியிருக்க வேண்டுமென்ற நிலையில், அப்போது 34 வயதேயான அஸாத்துக்காக ஜனாதிபதியாவதற்கு குறைந்தபட்ச வயது 34 என அரசமைப்புச் சட்டத்திலேயே திருத்தம் கொண்டுவரப்பட்டது. அஸாத் ஜனாதிபதியானதிலிருந்து 2011 வரை எல்லாம் அவருக்கு சாதகமாகவே நடந்துகொண்டிருந்தன. அவருடைய குடும்பத்தினரின் இரும்புப் பிடிக்குள் நாடு இருந்தது.

2010ஆம் ஆண்டு துனிஷியா, எகிப்தில் ‘அரபு வசந்தம்’ எனப்படும் ஆட்சியாளர்களுக்கு எதிரான பொதுமக்களின் போராட்டம் தொடங்கியபோது, அப்படி ஒரு நிலை சிரியாவிலும் ஏற்படுமென்பதை அஸாத் நம்பவில்லை. ஆனால், 2011இல் ‘அரபு வசந்தம்’ சிரியாவை அடைந்தபோதும் அதை பொதுமக்களின் போராட்டமாக ஏற்க மறுத்த அஸாத், ஆட்சிக்கு எதிரான வெளிநாடுகளின் ஆதரவு பெற்ற பயங்கரவாதிகளின் போராட்டம் என்றுதான் கூறினார்.

ஜனநாயகத்தை வலியுறுத்தி அஸாத்துக்கு எதிராக நாட்டில் போராட்டங்கள் தொடங்கின. ஆனால், அந்தப் போராட்டங்களை பெரியளவிலான அடக்குமுறைகள் மூலம் எதிர்கொண்டார் அஸாத். எதிர்ப்பாளர்களை ஒடுக்குகிறேன் என்ற பேரில் பாடசாலைகள், மருத்துவமனைகள் மீதும் அஸாத்தின் இராணுவம் தாக்குதல் நடத்தியது. சொந்த நாட்டு மக்களுக்கெதிராகவே இரசாயனத் தாக்குதலை நடத்தியதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது.

ஆட்சிக்கு எதிரானவர்கள் என்று கருதியவர்கள் காணாமல்போனார்கள். இவர்களை சட்டத்துக்குப் புறம்பாகக் கைதுசெய்து சித்திரவதை செய்வதற்காகவே பல இடங்களில் சிறைக்கூடங்களையும் அஸாத் அரசு நடத்திவந்தது. டமஸ்கஸ் அருகேயுள்ள சைத்நயா சிறை, மனிதவதைக் கூடம் என்றே அழைக்கப்பட்டது. இங்கு நடந்த சித்திரவதைகள் கொடூரமானவை. சைத்நயாவில் மட்டும் 2011 முதல் 2015 வரை 13,000 பேர் தூக்கிலிடப்பட்டதாக ‘ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல்’ தெரிவித்துள்ளது. கிளர்ச்சியாளர்கள் சிரியாவைக் கைப்பற்றிய பின்னர், முதல் நடவடிக்கையாக சைத்நயா சிறையிலிருந்துதான் கைதிகளை விடுவித்தார்கள் என்பதிலிருந்து இந்தச் சிறையில் நடந்த கொடுமைகளை அறிந்துகொள்ளலாம்.

கிளர்ச்சிப் படைகளை அஸாத் எதிர்கொள்வதற்கு ரஷ்யா, ஈரான், ஈரான் ஆதரவு கிளர்ச்சிக் குழுக்கள் உதவின. உள்நாட்டுப் போருக்கு அரசியல் தீர்வுகாண வழிகள் இருந்தும் அதை நிராகரித்ததுதான் அஸாத் மீது வைக்கப்படும் பெரிய குற்றச்சாட்டு. அதன் விளைவு 5 இலட்சம் உயிர்கள் பறிபோகவும் 13 இலட்சத்துக்கும் அதிகமானோர் வீடுகளை இழந்து சொந்த நாட்டிலேயே அகதிகளாகவும் அண்டை நாடுகளில் தஞ்சமடையவும் காரணமாயிற்று.

ஈரானும் ரஷ்யாவும் அளித்துவந்த ஆதரவில் 13 ஆண்டுகளாக அஸாத்தின் கை ஓங்கியிருந்த நிலையில், இரண்டே வாரங்களில் அவர் ஆட்சியை விட்டு அகற்றப்பட்டிருப்பதற்கு அதே ஈரான், ரஷ்யாவின் உதவிகள் தடைப்பட்டதுதான் காரணம். உக்ரைனுடன் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாகப் போரில் ஈடுபட்டுள்ள ரஷ்யா தனது 7 இலட்சம் வீரர்களை இழந்துள்ளது. பெரும் பொருளாதார இழப்பையும் சந்தித்துள்ளது. இஸ்ரேல்-ஹமாஸின் போரைத் தொடர்ந்து, ஹமாஸுக்கு ஆதரவாக ஈரானும், ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லாவும் தமது கவனத்தைச் செலுத்திவருகின்றன. இந்தச் சூழ்நிலை மாற்றத்தை அறிந்து கிளர்ச்சிப் படையினர் அதிரடித் தாக்குதல் நடத்தி அஸாத் ஆட்சியை அகற்றிவிட்டனர்.

கிளர்ச்சிக் குழுவுக்கு தலைமை வகிக்கும் ஹயத் தஹ்ரீர் அல்-ஷாம், அமெரிக்காவால் பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் தலைவர் அபு முஹமது அல்-ஜொலானி ஈராக்கில் அமெரிக்காவுக்கு எதிரான போரில் பங்கேற்றவர். அவரது தலைமையை அமெரிக்கா எந்த அளவுக்கு ரசிக்கும் என்பது தெரியவில்லை. ஏற்கனவே ஐ.எஸ்.இயக்கத்தை ஒழிக்க வேண்டும் என்பதற்காக வடகிழக்கு சிரியாவில் குர்திஷ் படைகளுக்கு அமெரிக்கா ஆதரவளித்து வருகிறது. அந்தக் குர்திஷ் படையினருடன் அல்-ஜொலானியின் ஹயத் தஹ்ரீர் அல்-ஷாம் கிளர்ச்சிக் குழு சண்டையிட்டு வருகிறது. இதுதான் சந்தர்ப்பமென்று இஸ்ரேலும் சிரியா மீது கடும் தாக்குதலை மேற்கொண்டு வருகிறது. அஸாத் ஆட்சி அகற்றத்துக்குப் பின்னர் சிரியா மீது 480 தாக்குதல்களை இஸ்ரேல் மேற்கொண்டிருக்கிறது.

சிரியாவில் அஸாத் ஆட்சி என்னவோ அகற்றப் பட்டு கொடுங்கோல் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டதாகக் கூறிக் கொள்ளலாம். ஆனால், ஒருபுறம் கிளர்ச்சிக் குழு, ஒருபுறம் குர்திஷ் குழு, ஒரு புறம் ஐ.எஸ். போன்ற இயக்கங்கள், ஒருபுறம் இஸ்ரேல் என நாலாபுறமும் தாக்குதலை எதிர்கொள்ளும் சிரியாவின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே தொடர்கிறது.

## மக்கள் கடிதம்

வாசகர்களே!
உங்கள் பகுதியில் நிலவும் குறைபாடுகள், தேவைகளை சுட்டிக்காட்ட நாங்கள் இடம் தருகிறோம். தட்டச்சு செய்தோ, எழுத்து மூலமாகவோ அவற்றை நீங்கள் எமக்கு அனுப்பலாம். அவற்றை பிரசுரிப்போம்.

ஆசிரியர்,
மக்கள் கடிதம், தமிழன் பத்திரிகை நிறுவனம்,
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
அல்லது **thamilaneditor@gmail.com** என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.

## ஆலய வழிபாடு மொழி

தமிழ் மக்கள் வழிபாடு செய்யும் ஆலயங்களில் மக்களுக்கு விளங்கக் கூடிய தமிழ்மொழியில் வழிபாடு நடைபெறவில்லையே எனக் கருதும் குறைபாடு உள்ளது. இக்கருத்தை ஆதரவோடு அணுகவேண்டியது அவசியம். ‘‘யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதானது எங்கும் காணோம்’’ என்பது பாரதியார் கூற்று.

இப்படியிருக்க, ஏன் சைவ ஆலயங்களில் தமிழில் வழிபாடு நடைபெறவில்லை என்ற கேள்வி நியாயமே. மேலும் சமூக நடைமுறையில் கலியாணச் சடங்குகள், செத்த வீட்டுக் கிரியைகள், அந்தியேட்டி, துவசம் ஆகியனவற்றிலும் தாய்மொழிப் பிரவேசமே நன்று.

ஆகம முறைப்படி தோத்திரம் செய்யும் வேளையில் வேதத்தாலும் திருமுறைகளாலும் தோத்திரம் செய்யும்படி உள்ளது. தற்போது வடமொழித் தோத்திரங்களைக் கூறிய பின் திருமுறை ஓத இடம் தரப்படுகின்றது. அதாவது, திருமுறைகள் மிகக் குறுகிய நேரத்துள் அடக்கம். ‘சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்’ என்பது மணிவாசகம். எனவே, சுயமொழியில் வழிபாடு நிகழ்வதே சிறப்பு.

‘விதித்தன இயற்றலும் விலக்கின் ஒழித்தலும் அறம்’

***வ.சி. ஸ்ரீஸ்கந்தராசா,***
***ஆத்தியடி,***
***புலோலி மத்தி,***
***பருத்தித்துறை.***

## இன்றைய நாளில்...

- 577 – சேர் பிரான்சிஸ் டிரேக் இங்கிலாந்தின் பிளைமவுத்தில் இருந்து தனது உலகத்தைச் சுற்றிவரும் பயணத்தை ஆரம்பித்தார்.
- 1642 – டச்சு நாடுகாண் பயணி ஏபெல் டாஸ்மான் நியூசிலாந்தை அடைந்தார். இவரே நியூசிலாந்தை அடைந்த முதலாவது ஐரோப்பியர் ஆவார்.
- 1758 – வில்லியம் கோமகன் என்ற ஆங்கிலேயக் கப்பல் வடக்கு அட்லாண்டிக் கடலில் மூழ்கியதில் 360 பேர் உயிரிழந்தனர்.
- 1888 – யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சூறாவளியில் பலத்த சேதம் ஏற்பட்டது.
- 1972 – அப்பல்லோ-17இல் விண்வெளி வீரர்கள் யூஜீன் சேர்னன், அரிசன் சிமித் ஆகியோர் சந்திரனில் இறங்கினர். சந்திரனில் இறங்கிய கடைசி மனிதர்கள் இவர்களே.
- 1982 – தென்மேற்கு யேமனை 6.0 அளவு நிலநடுக்கம் தாக்கியதில் 2,800 பேர் உயிரிழந்தனர். 1,500 பேர் காயமடைந்தனர்.
- 1996 – ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளராக கொஃபி அனான் தெரிவுசெய்யப்பட்டார்.
- 2003 – ஈராக் போர்: முன்னாள் ஈராக் அரச தலைவர் சதாம் ஹுசேன் அவரது சொந்த ஊரான திக்ரித்துக்கு அருகே அமெரிக்கப் படையினரால் கைதுசெய்யப்பட்டார்.
- 2004 – முன்னாள் சிலி சர்வாதிகாரி அகஸ்தோ பினோசெ வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.
- 2006 – ஊனமுற்றோர் உரிமைகள் சாசனம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்



# சஜித்தின் தேசியப்பட்டியல் இழுபறியில் ஆப்பு இழுத்த குரங்கு நிலையில் ஹக்கீம்

## உலமா கட்சித்தலைவர் முபாறக் முப்தி சாடல்



(அட்டப்பள்ளம் செய்தியாளர்)

சமூகத்துக்கும் ரணில், மஹிந்த போன்றோருக்கும் துரோகம் செய்து பழக்கப்பட்ட ரஊப் ஹக்கீம், இப்போது சஜித் கட்சியின் தேசிய பட்டியல் இழுபறியில் ஆப்பு இழுத்த குரங்கு நிலையில் உள்ளார் என உலமா கட்சித்தலைவர் முபாறக் முப்தி தெரிவித்துள்ளார்.

இது விடயமாக அவர் நேற்று (12) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஹக்கீம் ஒரு முட்டாள் என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட்டு வெல்ல முடியாது என தெரிந்த ஹக்கீம், சஜித் கட்சியில் மறைந்து கொண்டு கண்டியில் போட்டியிட்டார்.

தான் கண்டியில் கேட்டு வெல்ல வேண்டும் என்பதற்காக கட்சியை சஜித்திடம் அடகு வைத்துவிட்டு இப்போது தேசியப் பட்டியலுக்காக ஒப்பந்தம் முறிந்துவிட்டதென்று புலம்பிக்கொண்டிருக்கிறார்.

இத்தனைக்கும் ஹக்கீம் பெற்ற முப்பதாயிரம் வாக்குகளுக்காக சஜித் தரப்பிடம் தேசிய பட்டியல் கேட்பது நியாயம் அல்ல. கடந்த 2020 தேர்தலிலும் சஜித் தேசியப் பட்டியல் கொடுக்கவில்லை. விழுந்த குழியில் தொடர்ந்தும் தெரிந்து கொண்டே விழுவதும் ஏமாறுவதும் ரஊப் ஹக்கீமின் தொடர் முட்டாள்தனம்.

நாங்கள் தியாகம் செய்து வளர்த்த கட்சியை நாசமாக்கியவர் இந்த ஹக்கீமும் அவரோடிருந்த, இருக்கும் கொள்ளைக்கூட்டமும் தான். அது மட்டுமின்றி சஜித் பிரேமதாசவுக்கும் அரசியல் அறிவு போதாது என்பதையும் இது காட்டுகிறது.

தேர்தலின்போது முஸ்லிம் காங்கிரஸ் முழுமையாக சஜித் கட்சியுடன் இணைந்து போட்டியிட வேண்டும் என்றும் அப்போதுதான் தேசியப் பட்டியல் தருவேன், இல்லாவிட்டால் தனித்தே போட்டியிட்டு வாருங்கள் என சஜித் ஹக்கீமிடமும் ரிஷாத்திடமும் சொல்லியிருக்க வேண்டும். அவரும் சிறு பிள்ளை போன்று நடந்துகொண்டார்.

முஸ்லிம் என்பதை தன் பெயரில் கொண்ட முஸ்லிம் காங்கிரஸினதும் ஹக்கீமினதும் தொடர்ச்சியான தவறுகளால் முஸ்லிம் சமூகம் அவமானப்பட்டு நிற்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஊழல், மோசடியை மட்டுப்படுத்த அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்துக்கு கனடா ஒத்துழைப்பு



ஊழல், மோசடியை மட்டுப் படுத்த தற்போதைய அரசாங்கம் முன் னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டங் களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வொல்ஷ் (Eric Walsh) தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திககுமார நாயக்க மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வொல்ஷ் (Eric Walsh) ஆகியோருக்கு இடையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (12) நடைபெற்ற சந்திப்பின்போதே இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

ஊழல் - மோசடியை ஒழிப்பது தொடர்பில் கனடா அரசாங்கத்தின் அனுபவங்களை இலங்கை அரசாங்கத்துடன் பகிர்ந்துகொள்வது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையின் பொருளாதார பின்னடைவுக்கு முன்பு காணப்பட்ட அரசியல் கலாசாரமே காரணம் என சுட்டிக்காட்டிய கனேடிய உயர்ஸ்தானிகர், தற்போதைய அரசாங்கம் அந்த அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு பாராட்டுத் தெரிவித்தார். இலங்கைக்கான கனேடிய தூதரகத்தின் இரண்டாம் செயலாளர் (அரசியல்) பெட்ரிக் பிகரிங் (Patrick Pickering) இதன்போது கலந்துகொண்டார்.

# எலிக் காய்ச்சல் அச்சுறுத்தல்

## அநுராதபுரத்தில் இதுவரை 10 பேர் உயிரிழப்பு

(அநுராதபுரம் நிருபர்)

அநுராதபுரம் மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் நோயினால் இதுவரையில் 10 பேர் உயிரிழந்துள்ளதாக பிரதேச சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்று நோய்ப் பிரிவு வைத்தியர் தேஜன சோமதிலக்க தெரிவித்தார்.

எலிக்காய்ச்சல் தொற்று சம்பந்தமாக வைத்தியர் தேஜன சோமதிலகவை தொடர்புகொண்டு வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மழையுடனான காலநிலை மற்றும் விவசாய நடவடிக்கைகள் காரணமாக தற்போது எலிக்காய்ச்சல் நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளின் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் மற்றும் அநுராதபுரம் மாநகர எல்லையிலும் இதுவரையில் எலிக்காய்ச்சல் நோயினால் 346 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வருடத்தின் ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் அநுராதபுரம் மாவட்டத்தில் எலிக்காய்ச்சல் நோயினால் 10 மரணங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 2023 ஆம் ஆண்டில் மாவட்டத்தில் 17 மரணங்கள் பதிவாகியுள்ளதுடன், 281பேர் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தொற்று நோய்ப் பிரிவின் தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

எலிக்காய்ச்சல் நோயின் தாக்கத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக வேண்டி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் உரிய மாத்திரைகளை பாவிப்பதன் மூலம் தாக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியுமென அநுராதபுரம் மாவட்ட தொற்றுநோய்ப் பிரிவின் வைத்தியர் தேஜன சோமதிலக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# பொத்துவிலில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிதியுதவி

### முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் - இலங்கை வக்பு சபை இணைந்து வழங்கிவைப்பு




(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

நாட்டில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் காரணமாக பல்வேறு பகுதிகளிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும் சேதமடைந்தன.

இந்நிலையில் பொத்துவில் பிரதேச மக்களுக்கான நிவாரண உதவி வழங்கும் முகமாக கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல்கள் சம்மேளனம் இலங்கை வக்பு சபைக்கு அனுப்பியிருந்த விண்ணப்பம் தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டு முஸ்லிம் தர்ம நிதியிலிருந்து (MCF) ரூபா 10 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

ஒதுக்கப்பட்ட இந்நிதியானது காசோலையாக திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸினால், கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் றிஸான் ஹுசைனிடம் நேற்று (12) திணைக்களத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ், உதவிப் பணிப்பாளர் எம்.எஸ்.அலா அஹமட், திணைக்கள வக்பு பிரிவு பொறுப்பாளர் ஏ.எஸ்.எம்.ஜாவித், வக்பு நியாய சபை செயலாளர் எம்.என்.எம்.ரோஷன், கொழும்பு மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.மஸீன் மற்றும் கொள்ளுப்பிட்டி சம்மேளனத் தலைவர் றிஸான் ஹுசைன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# துப்பாக்கிகளுடன் இருவர் கைது

(அநுராதபுரம் நிருபர்)

அநுராதபுரம், நொச்சியாகம பகுதியில் விசேட அதிரடிப்படையினர் நடத்திய சுற்றிவளைப்பின்போது இரு துப்பாக்கிகளுடன் சந்தேக நபர்கள் இருவரை கைதுசெய்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் அநுராதபுரம் முகாம் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய நேற்று முன்தினம் (11) நொச்சியாகம பொலிஸ் பிரிவின் ரனோவராவ பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர்கள் இருவரை கைது செய்துள்ளதுடன், வெளிநாட்டில் தயாரித்த துப்பாக்கி ஒன்றையும் உள்நாட்டில் தயாரித்த துப்பாக்கி ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.கைதுசெய்யப்பட்டவர்கள் 33, 34 வயதுகளையுடைய தலாவ மற்றும் நொச்சியாகம், காலதிவுள்வெவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# கண்டி மாவட்டத்தில் 48 பேர் தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை

## மாவட்ட பிரதித் தேர்தல் அதிகாரி சம்பத் பெர்னாண்டோ தகவல்

(ஜே.எம்.ஹாபீஸ்)

கண்டி மாவட்டத்தில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட 48 வேட்பாளர்கள் இதுவரை தமது செலவின அறிக்கைகளை தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பவில்லை என கண்டி மாவட்ட பிரதித் தேர்தல் அதிகாரி கலாநிதி சம்பத் பெர்னாண்டோ நேற்று (12) தெரிவித்தார்.

இதற்கான கால அவகாசம் ஏற்கனவே முடிந்துள்ள நிலையில், இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். கடந்த தேர்தலில் கண்டி மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றில் மொத்தம் 510பேர் போட்டியிட்டதாகவும் அதில் மேற்படி 48பேர் தமது செலவு அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தேர்தலுக்கு முன்பே இது பற்றி வேட்பாளர்களை அறிவுறுத்தி யிருந்ததாகவும் அது தொடர்பாக சுமார் 10 சதவீதத்தினர் கவனம் செலுத்தவில்லை என்பது கவலையளிப்பதாகவும் தெரிவித்தார்.

# தரம் ஒன்றுக்கு மாணவர்களை சேர்ப்பது தொடர்பில் வெளியான சுற்றறிக்கை

அரச பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான சுற்றறிக்கையை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இதன்படி குறித்த சுற்றறிக்கையில் முக்கிய மூன்று விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

01. 2025ஆம் ஆண்டில் தரம் ஒன்றுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கான வகுப்புகளை ஆரம்பித்தல் - பாடசாலைகளில் 2025ஆம் ஆண்டில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கான வகுப்புகள் 2025.01.30 வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அதற்கமைய 2025 தரம் ஒன்றுக்கு உள்வாங்கப்படும் புதிய மாணவர்களின் வகுப்புகளை உரிய முறையில் ஆரம்பித்து வரவேற்பதற்கு பொருத்தமான வேலைத்திட்டத்தை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் புதிய மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் வேலைத்திட்டம் இடம்பெறல் வேண்டும். அத்துடன் மாணவர்களுக்கும் மற்றும் பெற்றோருக்கும் எவ்விதமான பாதிப்பும் ஏற்படாத வகையில் இவ்வேலைத்திட்டத்தை ஒழுங்கமைப்பதை கவனத்தில் கொள்ளவும்.

இதன்போது ஆரம்பக் கல்வியின் நோக்கம், ஆரம்பக் கல்வியின் முதன்மை நிலைகள், ஆரம்பக் கல்வியில் தேர்ச்சி அடிப்படையிலான கலைத்திட்டம், பிள்ளைகளின் உடல், உள விருத்தி, அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் மற்றும் விருப்பத்துக்குரிய தேர்ச்சிகள், கணிப்பீடு மற்றும் பிள்ளையை இனங்காணும் வேலைத்திட்டம் தொடர்பாக தரம் ஒன்றுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களது பெற்றோருக்கு இலகுவாக விளங்கிக் கொள்ளும் வகையில் தெளிவுபடுத்துவது மிக முக்கியமாகும்.

03. மேலும் 2025ஆம் ஆண்டில் தரம் ஒன்றுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்களுக்காக "பிள்ளைகளை இனங்காணும் நிகழ்ச்சித்திட்டம்" 2025.01.31 வெள்ளிக்கிழமையன்று ஆரம்பிக்கப்பட்டு 2025.02.17 செவ்வாய்க்கிழமை வரையில் 10 நாட்களில் நிறைவுசெய்ய வேண்டும்.

இக்காலத்தை உச்ச அளவில் பயன்படுத்தி மிகவும் நம்பகத் தன்மையுடன் கூடியதாக "பிள்ளைகளை இனங்காணும் நிகழ்ச்சித்திட்டம்" நடைமுறைப்படுத்துவது அனைத்து அதிபர்களினதும் பொறுப்பாகும் என்பதை தயவாக அறியத்தருகின்றேன்" என சுற்றறிக்கை குறிப்பிடுகின்றது.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (12.12.2024)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 181.4338 | 190.8506 |
| கனேடியன் டொலர் | 200.7109 | 209.4854 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38.5452 | 41.1068 |
| யூரோ | 298.6163 | 311.1680 |
| ஜப்பான் யென் | 1.8690 | 1.9451 |
| சிங்கப்பூர் டொலர் | 211.1828 | 221.0446 |
| ஸ்ரேலிங் பவுன் | 363.5147 | 377.4906 |
| சுவிஸ் பிரான்ங் | 320.8597 | 336.0928 |
| ஐ.அ. டொலர் | 285.9466 | 294.5168 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 769.4045 |
| குவைட் | குவைட் தினார் | 943.9609 |
| ஓமான் | ஓமான் றியால் | 754.0164 |
| கட்டார் | கட்டார் றியால் | 79.6314 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 77.2455 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 79.0352 |

# வாழ்க்கைப் பாடம்

ஏ.சீ.அகார் முஹம்மத், முதல்வர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

## நன்றியுள்ள நல்லடியார்களாக வாழ்வோம்; நலம் பெறுவோம்!

ஒரு மனிதர் இருந்தார். அவர் கண்பார்வையை இழந்தவர்; கை,கால் இரண்டும் ஊனமுற்றவர்.இந் நிலையிலிருந்த அவர் உணர்வுபூர்வமாக அல்ஹம்துலில்லாஹ் எனக் கூறி அல்லாஹ்வைப் புகழ்ந்து கொண்டிருந்தார்.

இதனைப் பார்த்த மற்றொருவர், "என்ன இது? உமக்கோ கண் பார்வையில்லை; கைகள் இல்லை; கால்களும் இல்லை. நீர் முடமாகக் கிடக்கின்றீர். அல்ஹம்துலில்லாஹ் என்று சொல்லி அவனைப் புகழ உம்மிடம் என்னதான் இருக்கின்றது" எனக்கேட்டார்.

அதற்கு அந்த மனிதரோ,

"என்னிடம் என்ன இருக்கின்றதா?

அவனுக்கு நன்றி சொல்ல எனக்கு ஒரு நா இருக்கின்றது; அவனை அஞ்சிப் பயப்பட ஓர் இதயம் இருக்கின்றது; சோதனைகளுக்கு முன்னால் பொறுமை காக்க ஓர் உடல் இருக்கின்றது. இவற்றுக்காக அவனுக்கு நான் நன்றி சொல்லாமல் இருக்க முடியுமா" எனக் கூறினார்.

இந்த மனிதரே அல்லாஹ்வைப் புகழ்கின்றார்; அவனுக்கு நன்றி பாராட்டுகின்றார் என்றிருந்தால் நானும் நீங்களும் எந்தளவு தூரம் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று சிந்திக்க வேண்டும்.

முன், பின் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்ட ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இரவெல்லாம் கால் வீங்கும் அளவுக்கு நின்று வணங்குவார்கள் என்றால் எதற்காக,அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள அடியானாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

"நான் அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள ஓர் அடியானாக இருக்க வேண்டாமா? என்பார்கள் நபியவர்கள்.

அல்லாஹ்வின் அருள்களையும் அருட்கொடைகளையும் மேலும் மேலும் நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா

அதற்கான சிறந்த வழி அல்லாஹ்வுக்கு அதிகமதிகம் நன்றி செலுத்துவதுதான். அல்லாஹ் சொல்கின்றான்:

"நீங்கள் (எனக்கு வழிப்படுவதன் மூலம்) எனக்கு நன்றி செலுத்தினால் நான் எனது அருட்கொடைகளை மேலும் உங்களுக்கு அதிகரித்துத் தருவேன்". (ஸூறா இப்றாஹீம்:07)

அல்லாஹ் தனது அடியார்கள் தனக்கு நன்றி பாராட்டுபவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றான்.

அல்லாஹ் கூறுகிறான்:

"ஆகவே, நீங்கள் என்னை நினைவு கூருங்கள்; நானும் உங்களை நினைவு கூர்வேன். இன்னும், நீங்கள் எனக்கு நன்றி செலுத்துங்கள்; எனக்கு மாறு செய்யாதீர்கள்."

அல்லாஹ் நபி முஹம்மத் (ஸல்) அவர்களை விழித்து சொல்கின்றான்:

"மேலும் நீர் நன்றி செலுத்துபவர்களில் ஒருவராக இருப்பீராக."

இதே விஷயத்தை நபி மூஸாவைப் பார்த்தும் சொல்லுகின்றான்.

முஃமீன்களுக்கும் இதே கட்டளையை பிறப்பிக்கின்றான்:

"நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களுக்கு அளித்துள்ளவற்றில் தூய்மையானவற்றையே உண்ணுங்கள்; நீங்கள் அல்லாஹ்வையே வணங்குபவர்களாக இருப்பீர்களாயின், அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி வாருங்கள்."

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்கான முறைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

முதலாவதாக அல்லாஹ் நம்மீது சொறிந்துள்ள அருட்கொடைகளை உள்ளத்தால் ஏற்க வேண்டும்.

அவற்றைப் பற்றி வெளிப்படையாக பேச வேண்டும். அவற்றுக்காக அல்லாஹ்வை வாய் விட்டு புகழ வேண்டும்.

அவன் அருளிய நிஃமத்துக்களை அவனுக்கு வழிபடும் விஷயங்களில் பயன்படுத்த வேண்டும்.

இவை அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்கான வழிகள்.

அதிகாலையில் கண்விழித்தவுடன் தூக்கத்தின் மூலம் நம்மை மரணிக்கச் செய்து மீண்டும் விழிக்கச் செய்து நமக்கு உயிரளித்த அல்லாஹ்வைப் புகழ்ந்து நன்றி சொல்கின்றோம்.

தொழுகை உட்பட நாம் நிறைவேற்றும் வணக்க வழிபாடுகள் எல்லாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் வகையில் அமைந்தவைதான்.

அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவர் பெறும் நன்மைகள் பல.

ஆரம்பமாக ஷுக்ர் முஃமினின் அடிப்படையான ஒரு பண்பு.

அது அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெறுவதற்கான சிறந்த வழி.

அவனது அருட்கொடைகளை மேலும் மேலும் பெற்றுக் கொள்வதற்கான ஒரு வழியும் கூட.

ஈருலகிலும் அல்லாஹ்வுடைய தண்டனைகளிலிருந்தும் தப்பிக் கொள்ளவும் மறுமையில் நிறைவான நற்கூலியைப் பெற்றுக் கொள்ளவும் அவனுக்கு நன்றி செலுத்தி வாழ்வது உதவும்.

நன்றியுள்ள நல்லடியார்களாக வாழ்வோம்; நலம் பெறுவோம்!

# ஹொரணையில் புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையின் சர்வதேச விருது விழா



புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையும் கிரீன் சேனல் கல்வி நிறுவனமும் இணைந்து நடத்திய சர்வதேச விருது வழங்கும் விழா ஹொரணை வாசனா (ரந்தாரா) மண்டபத்தில் கடந்த 08 ஆம் திகதி இடம்பெற்றது.

புதிய வானம் மக்கள் நல அறக்கட்ளையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மணி ஸ்ரீகாந்தன், அறக்கட்ளையின் நிறுவுனர் தனலட்சுமி மாதவன் ஆகியோரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் ஆலோசகர் புரவலர் ஹாஷிம் உமர், கனடா சர்வதேச விழித்தெழு பெண்ணே அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி டாக்டர் நரேந்திரா விவேகானந்தன், இங்கிரிய சுவிஷேச கூடார சபையின் தலைவர் பாஸ்டர் மகேந்திரன், இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த இந்திய சுதந்திர போராட்ட மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்முவின் வம்சாவளியைச் சேர்ந்த வீரபாண்டிய கட்டபொம்மன், மக்கள் முன்னேற்ற இயக்கத்தின் தலைவர் எல்.டி.ஆர். இளைய கட்டபொம்மன்,பா. ஆறுமுகபாண்டியன், டாக்டர் எம்.ஜி.ஆர். ரவி, டாக்டர் ரா.மோகன்தாஸ், ஆர்.சீனிவாசன், கே. தியாகராஜன் ஆகியோருடன் இலங்கை நெய்னார் சமூக நல காப்பகத்தின் தலைவர் இம்ரான் நெய்னார், இலங்கை சிங்களத் திரைப்பட நடிகை நிரஞ்சனி சண்முகராஜா, கிரீன் சேனல் கல்வி அமைப்பின் தலைவர் கரு.பத்மநாதன்,சர்வதேச அமைப்பாளர் திருக்கேஸ் செல்லச்சாமி, இந்திய வம்சாவளி பேரவையின் தலைவர் சுப்ரமணியம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் சிறப்பம்சமாக புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையின் வேண்டுகோளுக்கமைய ஹொரணை,கல்பாத்தையைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவன் ஆசைத்தம்பி அனோஜ் தேசானுக்கு ஹாஷிம் உமர் பௌண்டேசனினால் பெறுமதிவாய்ந்த மடிக்கணினி ஒன்றும் அன்பளிப்பாக இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமரினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(படப்பிடிப்பு: எஸ்.கிஷோகுமார்)

# இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் தேசிய சாரணர் விருது வழங்கும் நிகழ்வு
















-எம்.எப்.றிபாஸ்-

இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் தேசிய சாரணர் விருது வழங்கும் விழா கடந்த 07ஆம் திகதி அலரி மாளிகையில் இடம்பெற்றது. பிரதம சாரண ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்ரித் பெர்னாண்டோ தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதமர் ஹரிணி அமரசூரிய பிரதம அதிதியாகவும் பிரதமரின் செயலாளர் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து மாவட்ட சாரண ஆணையாளர்கள், உதவி சாரண ஆணையாளர்கள் மற்றும் சாரணத் தலைவர்கள் என அதிகமானோர் கலந்து கொண்ட நிகழ்வில் வெளிநாடுகளிலிருந்தும் சாரணத் தலைவர்கள் வருகை தந்து விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

சாரணியத் துறைக்காற்றிய சேவையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட சாரணத்தலைவர் களுக்கே மேற்படி விருதுகளும் சான்றிதழ்களும் பிரதமர், பிரதமரின் செயலாளர் ஆகியோர்களினால் வழங்கப்பட்டன.

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்திலிருந்து மாவட்ட ஆணையாளரின் சிபாரிசுக் கமைய திறமைப் பதக்கத்தை முன்னாள் மாவட்ட சாரண ஆணையாளர் யூ.எல்.எம்.ஹாசிம், உதவி ஆணையாளர் எஸ்.தஸ்தகீர் பெற்றுக்கொண்டதுடன் சேவைப் பதக்கத்தை மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெப்பை, உதவி ஆணையாளர் எம்.எப்.றிபாஸ், நன்றி பதக்கத்தை மாவட்ட சாரண சங்கத்தின் உறுப்பினர்களான முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வீ.குணாளன், முன்னாள் அதிபர்களான வீ.ஜெயந்தன், யூ.எல்.எம்.ஐ. றுசைக் ஆகியோரும் உதவி மாவட்ட ஆணையாளர்களான எம்.எஸ்.எம்.மலீக், எம்.ஏ.லத்தீப் (பயிற்சி), மாவட்ட சாரணத் தலைவர்களான எஸ்.எல்.எம்.காத்தாபி, இ.நஸ்ருல்லாஹ் ஆகியோருக்கு பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டன. இதேவேளை இன்னும் பலர் சான்றிதழ்களை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## 'போக்குவரத்து விதிகளைப் பிற்பற்றி பாதுகாப்பாக வாழும் உரிமையை உறுதிப்படுத்தல்' விழிப்புணர்வு கருத்தாடல்



(மட்டக்களப்பு செய்தியாளர்)

"கவனத்துடனும் அக்கறையுடனும் போக்குவரத்து விதிகளைப் பிற்பற்றி பாதுகாப்புடன் வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தல்" எனும் தொனிப்பொருளில் அமைந்த நிகழ்நிலை ஊடான கருத்தாடல் நிகழ்வு மட்டக்களப்பு கல்லடி தனியார் விடுதியில் திங்களன்று (09) இடம்பெற்றது.

சைல்ட் பண்ட் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ வலுவூட்டல் நிறுவனத்தினால் "இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்கள் பாதுகாப்பாக வாகனம் ஒட்டுவதன் மூலம் வாழ்வதற்கான உரிமைகளை உறுதி செய்தல்" எனும் நிகழ்நிலை விழிப்புணர்வு பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த விழிப்புணர்வூட்டல் கருத்தாடல் நிகழ்வின் அதிதிகளாக சட்டவாளர் சந்திரலிங்கம் சந்திர குமார், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர விபத்துப் பிரிவின் வைத்திய அதிகாரி செபரெட்ணம் பிரான்ஸிஸ் அல்மெய்டா, அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ வலுவூட்டல் நிறுவனத்தின் முகாமையாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி சுரேஷ், இளைஞர் அபிவிருத்தி வலுவூட்டல் செயற்றிட்ட இணைப்பாளர் அனுலா அன்ரன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துகளை வெளியிட்டனர்.



***டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு, கிண்ணியா நகரசபை பிரிவுக்குட்பட்ட கண்டலடி ஊற்று பகுதியில் கிண்ணியா நகரசபை செயலாளர் எம்.கே.அனீஸ் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை(11) சிரமதான நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது, டெங்கு நோய் பரவக்கூடிய இடங்கள் இனங்காணப்பட்டு அவை துப்புரவு செய்யப்பட்டதுடன், ஆறுகள், ஏரிகள் ஆகியவற்றில் தேங்கிக் கிடக்கும் குப்பை கூளங்கள் அகற்றப்பட்டு அவை அழகுபடுத்தப்பட்டன. கிண்ணியா நகர சபை, கிண்ணியா பிரதேச இளைஞர் சம்மேளனம், அல்-றவ்லா இளைஞர் கழகம் இணைந்து பெரண்டினா நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த சிரமமான நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.***
***(சீனக்குடா செய்தியாளர்)***





***பட்டிருப்பு வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட களுதாவளை கிராமத்தில் அமைந்துள்ள ஆறு ஆரம்பக்கல்வி பாடசாலைகள் ஒன்றிணைந்து நடத்திய புத்தாக்க கண்காட்சி நேற்று வியாழக்கிழமை(12) இடம்பெற்றது.களுதாவளை புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை வித்தியாலய அதிபர் நாமகள் சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் கலந்துகொண்டார். அத்துடன் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.***
***(பாண்டிருப்பு செய்தியாளர்)***

## ஊடகவியலாளர் பைஷலுக்கு மாகாண சாஹித்திய விருது



(சீலாமுனை செய்தியாளர்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 2024ஆம் ஆண்டு மாகாண இலக்கிய விழாவில் ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் சமூக விஞ்ஞானம் (ஆயுர்வேதம்) 'மாகாண சாஹித்திய விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி.திசாநாயக்க தலைமையில் புதன்கிழமை(11) திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இவ்விழாவில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீலினால் பைஷல் இஸ்மாயில் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம், சான்றிதழ் மற்றும் காசோலை வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பொதுமக்களுக்கு நோய் பற்றிய தெளிவையும் அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெற்றுக்கொள்ளலாம் என்ற விழிப்புணர்வுகளையும் வழங்கும் நோக்கில், துறைசார் வைத்திய நிபுணர்கள் ஊடாக பெற்றுக்கொண்ட மருத்துவ ஆக்கங்களை 'நலன் தரும் மருத்துவம்' என்ற பெயரில் ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் தொகுத்து வெளியீடு செய்திருந்தார்.

அந்நூல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நடுவர் குழுவினால் தெரிவு செய்யப்பட்டு சமூக விஞ்ஞானம் (ஆயுர்வேதம்) மாகாண சாஹித்திய விருது வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர பிரதம அதிதியாகவும் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க சிறப்பு அதிதியாகவும் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர். இவ்விழாவில், கடந்த மூன்று வருடங்களுக்குள் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கான விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

***வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் நேற்று வியாழக்கிழமை (12) விஜயம் செய்தார். இதன்போது பாடசாலை அதிபர் என்.சஹாப்தீன் பௌதீக வள தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு கோரிக்கை கடிதமொன்றை பாராளுமன்ற உறுப்பினரிடம் கையளித்தார். இவ்விஜயத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும் கல்குடா தொகுதி அமைப்பாளருமான சட்டத்தரணி ஹபீப் றிபான், ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேச சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பாடசாலை ஆசிரியர்கள் எனப்பலரும் இணைந்திருந்தனர்.***
***(மீராவோடை செய்தியாளர்)***



## சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம்



(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

"உள்வாங்கிய மற்றும் நிலையான எதிர்காலத்துக்காக மாற்றுத் திறனாளிகளின் தலைமைத்துவத்தை விரிவுபடுத்தல்"எனும் தொனிப்பொருளில் சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் கோறளைப்பற்று தெற்கு கிரான் புதிய பாதை விசேட தேவையுடையோர் அமைப்பின் ஏற்பாட்டில் கிரான் றெஜி கலாசார மண்டபத்தில் புதன்கிழமை(11) இடம்பெற்றது.

அமைப்பின் தலைவர் ஆ.நவரெட்ணம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் கா.சித்திரவேல் கலந்து கொண்டார்.

கிரான் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் சௌ.சிவநேசராசா ,சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுபலக்ஷன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் சிறப்பு அதிதிகளாக வாழ்க்கை தொழிற்பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி திருமதி ஜி.சுகந்தினி, மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சம்மேளனத் தலைவர் எஸ்.அருள்ராஜ், டேட்டா செறிட்டி இணைப்பாளர்.கே.ஜீவராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது வறிய மாணவர்களின் நலன் கருதி கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் பிரதேச செயலாளர் கா.சித்திரவேல் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். அதேவேளை, இதற்கான நிதி அனுசரணையை லண்டனைச் சேர்ந்த சிறிலங்கன் பெமலி செறட்டி நிறுவனத்தினர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெள்ளத்தினால் உயிரிழந்த மத்ரஸா மாணவர்களின் குடும்பங்களுக்கு அரசினால் நஷ்டஈடு வழங்கிவைப்பு



(நாவிதன்வெளி செய்தியாளர்)

காரைதீவு - மாவடிப்பள்ளி பாலத்துக்கருகில் உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்த சம்மாந்துறையைச் சேர்ந்த மத்ரஸா மாணவர்கள் 06பேர் உள்ளிட்ட பொதுமகன் ஒருவருமாக ஏழு பேரின் குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் ரூபா 250,000 நஷ்டஈடு வழங்கும் நிகழ்வும் அவர்களுக்கான துஆப் பிரார்த்தனையும் புதன்கிழமை(11) சம்மாந்துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான ஏ.ஆதம்பாவா கலந்து கொண்டு காசோலைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது அம்பாறை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ஏ.எல்.மஹ்ரூப், சம்மாந்துறை உதவி பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம், கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்ஸா, சம்மாந்துறை நம்பிக்கையாளர் சபைத் தலைவரும் முன்னாள் அரசாங்க அதிபருமான ஐ.எம்.ஹனீபா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம். ஜெமீல், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம்.ஹுஸைன், ஆதம்பாவா எம்.பியின் இணைப்பாளர் எம்.இம்தியாஸ், சம்மாந்துறை உலமா சபைத் தலைவர் மௌலவி எம்.எல்.பஷீர், சம்மாந்துறை பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபர், அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.அஸாருத்தீன் உட்பட கிராம சேவகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் இந்நஷ்டஈட்டுத் தொகையை ஒரு மில்லியனாக அதிகரித்து வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் இதன்போது தெரிவித்திருந்தார். இந்நிகழ்வில் மௌலவி ஏ.பௌஸ்தீனினால் மரணித்தவர்களுக்காக துஆப் பிரார்த்தனை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சம்பூரில் பாலியல் துஷ்பிரயோகம்:

# எதிரிக்கு 30 வருட கடுழியச் சிறை; மூன்று இலட்சம் ரூபா நஷ்டஈடு

**(பதுர்தீன் சிஹானா)**

திருகோணமலை, சம்பூர் பகுதியில் 15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட பூசகருக்கு 30 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து திருகோணமலை மேல்நீதிமன்ற தீர்ப்பு வழங்கியுள்ளது.

திருகோணமலை மேல்நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம்.அப்துல்லாஹ் புதன்கிழமை(11) இத்தீர்ப்பை வழங்கியுள்ளார்.

சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 16 வயதுக்குக் குறைவான சிறுமியொருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச்சாட்டில் கைதான சந்தேக நபருக்கு எதிராக சம்பூர் பொலிஸார் வழக்குத்தொடுத்திருந்தனர். வழக்கின் விசாரணைகள் முடிவுற்ற நிலையில், குற்றவாளிக்கு எதிராக 30 வருட சிறைத்தண்டனையும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 03 இலட்சம் ரூபா நஷ்டஈடும் வழங்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். அத்துடன், குறித்த வழக்கில் பாதிக்கப்பட்டவரின் சார்பாக அரச சட்டத்தரணி கே. நசிகேதன் முன்னிலையாகியிருந்தார்.

சம்பூர் பகுதியைச் சேர்ந்த 41 வயதான பூசகர் ஒருவருக்கே இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 03ஆம் திகதி வரையான காலப்பகுதியில் குறித்த சிறுமி மூன்று தடவைகள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததாக விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

அந்தவகையில், ஒருதடவைக்காக 10 வருடங்கள் சிறைத்தண்டனை என்ற அடிப்படையில் 30 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நஷ்டஈடாக ஒரு குற்றத்துக்காக தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் மூன்று இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எலிக்காய்ச்சல் நோயினால் மட்டக்களப்பில் 74பேர் பாதிப்பு

## விழிப்புணர்வுடன் இருப்பது அவசியம் என்கிறார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் முரளீஸ்வரன்



**(மட்டக்களப்பு)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடம் எலிக்காய்ச்சல் நோயினால் 74பேர் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். இதில் கடந்த மாதம் நான்கு பேர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். குறிப்பாக, இந்த விடயம் தொடர்பில் விவசாயிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டுமென மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.முரளீஸ்வரன் தெரிவித்தார்.

எலிக்காய்ச்சல் நோயின் தாக்கம் எந்த நேரமும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரியளவில் அதிகரிக்கக்கூடிய வாய்ப்புள்ளது. பொதுமக்கள் உங்களது உயிரைக் காத்துக்கொள்ள இந்த நோய் சம்பந்தமான விழிப்புணர்வுடன் இருப்பது அவசியமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொது மக்கள் எலிக் காய்ச்சல் நோய் சம்பந்தமாக எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். எலிக் காய்ச்சல் நோயானது வயல்களிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வசிப்பவர்களைப் பெரிதும் பாதிக்கின்றது. வயல்களில் காணப்படுகின்ற வெள்ள நீர் அல்லது அப்பகுதியில் காணப்படுகின்ற கிணறுகளில் கலக்கின்றமையால் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் அந்த நீர் நிலைகளைப் பாவிக்க வேண்டும். அதன் மூலம் எலிக் காய்ச்சல் பரவக்கூடிய அபாயம் காணப்படுகின்றது.

விவசாயிகள் அந்த நீர் நிலைகளில் குளிக்கும்போதும் அதனை குடிக்கும்போதும் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். கூடியளவு இவ்வாறான பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் கொதித்தாறிய நீரைப் பருக வேண்டும். அப்பகுதி வயல்களில் இறங்கி வேலை செய்பவர்கள் போதிய பாதுகாப்பு அங்கிகளுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும். இந்த எலிக் காய்ச்சல் நோய் சம்பந்தமான மேலதிக தகவல் தேவைப்படுபவர்கள் அண்மையிலுள்ள சுகாதார அலுவலகத்தை நாட முடியும். எதற்கும் வைத்தியரின் ஆலோசனையுடன் நடந்து கொள்ள சிறந்ததாகும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

# மட்டக்களப்பில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த விசேட கலந்துரையாடல்





**(மட்டக்களப்பு)**

மட்டக்களப்பில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான முதலீட்டாளர்களுடன் விசேட கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மண்டபத்தில் புதன்கிழமை(11) இடம் பெற்றது.

நவீனமயப்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் மூலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கு மாவட்டத்தில் தொழில் முயற்சியாளர்களினால் திட்ட முன்மொழிவுகள் தெளிவூட்டப்பட்டதுடன் மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும், சுற்றுலா அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளும்போது எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பாகவும் முதலீட்டாளர்களால் கருத்துகள் பரிமாறப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் திருமதி நமசிவாயம் சத்தியானந்தி, உதவி மாவட்ட செயலாளர் ஜி.பிரணவன், மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் சுபா சதாகரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர்களான ரி.நிர்மலன், வி.நவநீதன், மாவட்ட சுற்றுலாத்துறை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஏ.விவேகானந்தராஜ், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், முதலீட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாண கல்வித் துறையிலுள்ள குறைபாடுகளை நிவர்த்திக்க கோரிக்கை

## இம்ரான் எம்.பி. ஆளுநரைச் சந்தித்து முன்வைப்பு



**(கிண்ணியா செய்தியாளர்)**

கிழக்கு மாகாணக் கல்வித்துறையிலுள்ள குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் புதன்கிழமை (11)ஆளுநரைச் சந்தித்து உரையாற்றும்போதே இந்தக் கோரிக்கையை விடுத்தார். இது தொடர்பில் அவர் குறிப்பிடுகையில்,

''கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பணி புரியும் கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள் வெளிநாடு செல்ல விடுமுறை மற்றும் வெளிநாடுகளின் சமய யாத்திரைக்கு விண்ணப்பித்து அதற்கான அனுமதி உரிய காலத்தில் வழங்கப்படாததால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக உரிய திகதிக்கு சில மாதங்களுக்கு முன் விண்ணப்பித்தாலும் அனுமதி உரிய காலங்களில் வழங்கப்படுவதில்லையென்று புகாரும் தெரிவிக்கப்படுகின்றது.

அனுமதியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இவர்கள் தொடர்ந்து கடமைக்குச் செல்கின்றனர். எனினும், இவர்கள் விண்ணப்பித்த விடுமுறை திகதியிலிருந்து வலயக் கல்வி அலுவலகங்களினால் சம்பளம் இடைநிறுத்தப்படுகின்றது. நிர்வாகச் சீர்கேடுகளினால் இந்த அசௌகரியம் ஏற்படுகின்றது. இவ்வாறு விண்ணப்பித்தவர்களின் கோவைகள் மாதக் கணக்கில் மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சில் தேங்கியிருப்பதாகவும் இதனை விரைவுபடுத்த இலஞ்சம் எதிர்பார்க்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப் படுகின்றன.அதேபோல, வெளிநாட்டு விடுமுறை அனுமதியிலும் பாரபட்சம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது. எனவே, தயவு செய்து இதன் உண்மைத் தன்மைகளை அறியும் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்'' - என்றார்.

# மூதூரில் 10 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் குடும்பஸ்தர் கைது

**(சீனக்குடா செய்தியாளர்)**

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் 10 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் புதன்கிழமை (11) இரவு இவரைக் கைதுசெய்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தப்படுவதாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அவ்விடத்துக்குச் சென்று குறித்த சந்தேக நபரை சோதனை செய்த போது அவரிடமிருந்து போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் சந்தேக நபரை மேலதிக விசாரணைக்காக மூதூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.


# மட்டக்களப்பில் 12,000 மில்லி லீற்றர் அடங்கிய 03 கொள்கலன் கசிப்பு மீட்பு

## கிராம சேவகர்களினால் துணிகரம்

**(வவுணதீவு செய்தியாளர்)**

மட்டக்களப்பு, மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட தாந்தாமலை கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள காட்டுப் பகுதியில் கிராம உத்தியோகத்தர்கள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையால் மூன்று கொள்கலன் சட்டவிரோத கசிப்பு வியாழக்கிழமை (12) கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

கிராம மக்கள் மூலம் தாந்தாமலையை அண்டிய கிராமப் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர்களுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைவாக, காட்டுப்பகுதியில் மேற்கொண்ட தேடுதலில் 12,000 மில்லி லீற்றர் அடங்கிய சட்டவிரோத கசிப்பு 03 கொள்கலன்களில் இருந்து கைப்பற்றப்பட்டது.



குறித்த சம்பவத்தின்போது, சந்தேக நபர்கள் அவ்விடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் கைப்பற்றப்பட்ட கசிப்பு அவ்விடத்திலேயே அழிக்கப்பட்டதாகவும் கிராம உத்தியோகத்தர்கள் மேலும் தெரிவித்தனர்.

# கல்முனை மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி மாடுகள், நாய்களினால் சிரமம்

## போக்குவரத்துக்கு பாதிப்பு எனவும் சுட்டிக்காட்டு



**(பாறுக் ஷிஹான்)**

கட்டாக்காலி மாடுகள், நாய்களினால் ஏற்படும் விபத்துகள் மற்றும் போக்குவரத்துச் சிரமங்கள் தொடர்பில் பொதுமக்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளான நற்பிட்டிமுனை, பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, சாய்ந்தமருது மற்றும் நகரப்பகுதிகளில் அதிகளவான கட்டாக்காலி மாடுகள், நாய்கள் அண்மைக்காலமாக உலா வருகின்றன. இதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள், வாகனச் சாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையெனவும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அதிகமான மாடுகள், நாய்கள் வீதியிலேயே படுத்துறங்குவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்துக்கு முன்னுள்ள வீதியில் நாய்கள் நடமாடுவதோடு பல நாய்கள் பொலிஸ் நிலையம் செல்லும் வாசலில் வீதியில் படுத்துறங்குகின்றன.

மாலை நேரப் பொழுதில் அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதனால் வீதி விளக்குகள் போதியளவில் இல்லாத ஓர் துர்ப்பாக்கிய நிலையும் இங்கு காணப்படுகின்றது. எதிர்பாராத நேரத்தில் வாகனங்களுக்கு குறுக்காக நாய்கள் பாயும்போது நாயுடன் வாகனம் மோதிக் கொள்வதை தவிர்ப்பதற்காக திடீரென தடுப்பிடும்பொழுது அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது.

எனவே, சமூகநலன் கருதி மாநகர சபை மற்றும் பிராந்திய சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

# ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்ட அநீதிகளை ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும்

## திருமலை கங்கத்தலாவ ஊடகவியலாளர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு மகஜர்



**(சீனக்குடா செய்தியாளர்)**

கடந்த காலங்களில் ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்ட அநீதி குறித்து, விசாரணை செய்வதற்கு விசேட ஆணைக்குழுவை நியமிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்து திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியம் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திராவிடம் புதன்கிழமை(11) திருகோணமலையில் வைத்து இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

பத்திரிகையாளர்கள் கொலை, ஊடகவியலாளர்கள் காணாமல் போனமை, கடத்தல் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஆகியவற்றை விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை நியமித்து, குற்றவாளிகள் இனங்காணப்பட வேண்டுமெனவும் அவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதோடு, அநீதிக்கு உள்ளாக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி பெற்றுக் கொடுக்க வேண்டுமெனவும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சில தசாப்தங்களாக பல்வேறு அரசாங்கங்களின் கீழ் பல ஊடகவியலாளர்கள் துன்புறுத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர். அத்தோடு, மேலும் சிலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். மேலும் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். இதற்காக அந்தந்தக் காலப்பகுதியில் ஊடக சங்கங்கள் இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை நடத்தியதுடன் அதற்காக எடுக்கப்பட்ட பாரபட்சமற்ற விசாரணைக்கான கோரிக்கைகளும் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன என மேலும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் அமதுரு ஜீவானந்தா, அமைப்பாளர் ஒலுமுதீன் கியாஸ் ஷாபி, பொருளாளர் கீத பொன்கலன் மற்றும் உதவிச் செயலாளர் எம்.எச்.எம்.யூசுப் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com

## செலான் 'பாங்க' சாதனையாளர் கொண்டாட்டத்தை யூனியன் அஷ்யூரன்ஸ் முன்னெடுப்பு






இலங்கையின் முதல் தர பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ் செலான் வங்கியின் பாங்கசூரன்ஸ் சாதனையாளர்களைக் கௌரவிக்கும் கொண்டாட்ட நிகழ்வை அண்மையில் முன்னெடுத்திருந்தது. காலி Radisson Blu Resort இல் தங்கியிருந்து முன்னெடுக்கப்பட்ட விசேட நிகழ்வாக இது அமைந்திருந்ததுடன், வருடம் முழுவதும் சிறந்த பெறுபேறுகள் மற்றும் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருந்த செலான் வங்கியின் கிளை வலையமைப்பைச் சேர்ந்த 100க்கும் அதிகமான அணி அங்கத்தவர்களின் சிறந்த சாதனைகளைக் கௌரவிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்ட பெருமைக்குரிய விருதுகள் வழங்கும் நிகழ்வும் இதன் போது முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் இரு நிறுவனங்களினதும் நிறைவேற்றுக் குழு மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்த பல அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். இந்தப் புத்தாக்கமான வழிமுறையினூடாக, பாங்கசூரன்ஸ் பங்காளர்கள் மத்தியில் உறுதியான மற்றும் ஒன்றிணைந்த உறவைக் கட்டியெழுப்புவதில் யூனியன் அஷ்யூரன்ஸ் காண்பிக்கும் அர்ப்பணிப்பு பிரதிபலிக்கப்பட்டுள்ளது.

## புதிய வளாகத்துக்கு மாற்றப்பட்ட LOLC ஃபைனான்ஸ் யாழ். மெட்ரோ கிளை





இலங்கையின் முதன்மையான வங்கி அல்லாத நிதி நிறுவனமான (NBFI) LOLC ஃபைனான்ஸ் பி.எல்.சி., அதன் யாழ்ப்பாண மெட்ரோ கிளையை யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதி, இல. 584 இல் உள்ள தனது சொந்த வளாகத்துக்கு மாற்றியமைப்பதாக பெருமையுடன் அறிவிக்கிறது. இந்த மூலோபாய நடவடிக்கையானது யாழ்ப்பாணம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள சமூகத்துக்கு சிறந்த அணுகலை மேம்படுத்துவதற்கும் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட நிதித் தீர்வுகளை வழங்குவதற்கும் நிறுவனத்தின் உறுதிப்பாட்டைப் பிரதிபலிக்கிறது.

அதன் வளமான கலாசார பாரம்பரியம் முதல் இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணத்தில் பொருளாதார மையமாக வளர்ந்து வரும் முக்கியத்துவம் வரை பாரம்பரியம் மற்றும் முன்னேற்றத்தின் இணக்கமான கலவையை உள்ளடக்கியது. LOLC ஃபைனான்ஸ் இன் இரண்டாவது யாழ்ப்பாணக் கிளையும் அதன் சொந்த நவீன வசதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டமை, வணிகங்களை வலுப்படுத்துதல், சமூகத்தை மேம்படுத்துதல் மற்றும் பிராந்தியத்தில் நிலையான அபிவிருத்தியை முன்னெடுப்பதில் நிறுவனத்தின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது.

2024 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 04 ஆம் திகதி நடைபெற்ற இந்த மாபெரும் திறப்பு விழாவில், LOLC ஃபைனான்ஸ் பி.எல்.சியின் பணிப்பாளர் ஃ தலைமை நிர்வாக அதிகாரி கிரிஷான் திலகரத்ன மற்றும் LOLC ஃபைனான்ஸ் பி.எல்.சியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி மொன்டினி வர்ணகுல ஆகியோரின் பங்குபற்றுதலின் மூலம் இந்நிகழ்வு நடைபெற்றது. பிரசன்ன கரந்தகொல்ல, LOLC ஃபைனான்ஸ் பி.எல்.சியின் குழுமங்களின் தலைவர். இந்நிகழ்வில் LOLC நிதி முகாமைத்துவக் குழு, பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் நலன் விரும்பிகள் பங்குபற்றியதுடன், வடமாகாணத்தில் நிறுவனத்துக்கு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக அமைந்தது.

## workplace wellness விருதைத் தனதாக்கிய AIA இன்சூரன்ஸ்



AIA இன்சூரன்ஸ் பணி செய்வதற்கான மிகச்சிறந்த இடம் (கிரேட் பிளேஸ் டு வேர்க்-Great Place to Work®) நிறுவனத்தின் இலங்கையில் முதன்முறையாக பணியிட நல்வாழ்வுக்கான (workplace wellness) விருதைத் தனதாக்கியிருக்கின்றது. பணியாளர் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கு முன்னுரிமையளிக்கும் நிறுவனங்களைப் பாராட்டி கௌரவிக்கும் தொடக்கப் பட்டியலில் 2024 ஆம் ஆண்டுக்கான நல்வாழ்வு வெற்றியாளராக AIA இன்சூரன்ஸ் கௌரவிக்கப்பட்டிருந்ததுடன் இந்த விருதை வெற்றி பெற்ற ஒரேயொரு காப்புறுதி நிறுவனமாகவும் திகழ்கின்றது. AIA நிறுவனத்தின் ஒவ்வொரு குழு உறுப்பினரதும் உடல், உள ஆரோக்கியத்தை ஆதரிக்கும் பணியிடத்தை மேம்படுத்துவதில் AIA இன் அர்ப்பணிப்பை இப்பாராட்டு பிரதிபலிக்கின்றது.

AIA இன்சூரன்ஸில் ஆரோக்கியம் என்பது ஒரு சாதாரண கருத்து என்பதற்கப்பால் இது நிறுவனத்தின் வர்த்தகநாம நோக்கத்தின் முக்கியமான மற்றும் அடிப்படையான தூணாகவே அமைந்திருக்கின்றது. AIA மிகவும் நீண்ட காலமாக தனது வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகங்களுக்கு ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் உறுதியான நிலையில் செயற்பட்டு வருவதுடன், இந்த விருதானது உள நலனில் எங்களின் சமமான சக்திவாய்ந்த நோக்கத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. AIA இன் பணியாளர்ளுக்கு ஆதரவான மற்றும் ஒன்றாக இணைந்து சம அங்கீகாரம் பெற்றதாக உணரும் பணிச்சூழலை வழங்குவதன் மூலம் AIA அதன் குழு உறுப்பினர்களை தொழில் ரீதியாக மட்டுமன்றி தனிப்பட்ட முறையிலும் செழித்தோங்கச் செய்வதற்கு உதவி செய்கின்றது.










**அமேசன் உயர்கல்வி நிறுவனத்தின் வருடாந்த பட்டமளிப்பு விழா- 2024 கல்லூரி பணிப்பாளர் இல்ஹாம் மரிக்கார் தலைமையில் அண்மையில் BMICH இல் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் யூ.எல்.அப்துல் மஜீத், சிறப்பு அதிதியாக மாலைதீவு பாராளுமன்ற உறுப்பினர் ஹுசைன் ஷரீப், விசேட அதிதிகளாக ஜெயவர்தனபுர பல்கலைக்கழக மானிடவியல் துறைசார் நிபுணர் பேராசிரியர் பிரனீத் அபேசுந்தர, களனி பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறைசார் நிபுணர் பேராசிரியர் எஸ்.ஜே.யோகராஜா மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக குற்றவியல் துறை மூத்த விரிவுரையாளர் உதயகுமார அமரசிங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.**

**படங்கள்:** *எம்.எப்.றிபாஸ்*




**DIMO நிறுவனம் CMA Excellence in Integrated Reporting Awards 2024 இல், மதிப்புமிக்க ஒட்டுமொத்த பிரிவுக்கான தங்க விருதையும் ஒப்பற்ற ஒருங்கிணைந்த அறிக்கையிடலுக்கான ஏனைய ஐந்து கௌரவங்களையும் பெற்றுள்ளது. இச்சாதனைகளில் 5 சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கையிடல்களில் அது இடம்பிடித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன், Best Integrated Report in the Diversified Holdings Sector பிரிவில் 'Joint Winner' எனும் விருதையும் அது வென்றுள்ளதோடு, Best Disclosure on Value Creation, Best Concise Integrated Report, Integrated Thinking ஆகியவற்றிலான சிறந்த வெளிப்படுத்தலுக்கான விசேட விருதுகளையும் பெற்றுள்ளது. குறித்த விருது வழங்கும் விழாவில் DIMO தலைமைத்துவ உறுப்பினர்கள் ஒட்டுமொத்த பிரிவுக்குமான தங்க விருதைப் பெறுவதைப் படத்தில் காணலாம்.**

## இலங்கையின் முதலாவது கைத்தொழில் - விசேடத்துவ வடிப்புக்கான புத்தாக்க நிலையத்தை ஆரம்பித்த லயன் ப்ருவரி




லயன் ப்ருவரி (சிலோன்) பி.எல்.சி., ஏற்றுமதி சந்தைகளை இலக்காகக் கொண்ட கைத்தொழில் மற்றும் விசேடத்துவ (Craft & Speciality) வடிப்புக்கான இலங்கையின் முதலாவது புத்தாக்க நிலையத்தை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளது. முதலீட்டு சபையின் அனுமதியில் இயங்கும் திட்டமாக இது அமைந்திருப்பதுடன், கைத்தொழில் மற்றும் விசேடத்துவ வடிப்பு தொடர்பான ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேம்படுத்துவதில் இந்த நிலையம் தன்னை அர்ப்பணித்திருக்கும். லயன் ப்ருவரியின் புத்தாக்கமான வடிப்பு தொடர்பான தொடர்ச்சியான பயணத்தில் இந்தத் திட்டம் புதிய மைல்கல்லாக அமைந்திருப்பதுடன், சர்வதேச மட்டத்தில் இலங்கையின் வடிப்பு தொடர்பான பிரசன்னத்தை மேலும் மேம்படுத்துவதாக அமைந்திருக்கும்.

அடுத்த ஐந்தாண்டுக் காலப்பகுதியில் கைத்தொழில் மற்றும் விசேடத்துவ வடிப்புகளுக்கான சர்வதேச கேள்வி அதிகரிக்குமென தொழிற்றுறைசார் ஆய்வுகளின் மூலமாகக் கண்டறியப்பட்டுள்ளது. நுகர்வோர் நிலைபேறான வகையிலும் நேர்த்தியான முறையிலும் உயர் தரம் வாய்ந்த தெரிவு புத்தாக்கங்களில் கவனஞ்செலுத்துவது இதில் தாக்கம் செலுத்தும். மேலும், சுற்றுலாத் துறையினூடாகவும் இந்தக் கேள்வி அதிகம் நிலவுகின்றமையை அவதானிக்க முடியும். சுற்றுலாப் பயணிகள், தமது சுற்றுலாப் பயண அனுபவத்தை மேம்படுத்துவதற்காக விசேடத்துவமான உணவுகள் மற்றும் பான வகைகளில் அதிகளவு நாட்டம் கொண்டிருப்பர்.

## இருதய பராமரிப்பு முயற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ள லங்கா ஹொஸ்பிட்டல்ஸ்





அரசாங்கப் பணியாளர்கள், ஓய்வுபெற்ற அரசாங்கப் பணியாளர்கள் மற்றும் அக்ரஹார காப்புறுதி உறுப்பினர்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய இருதயப் பராமரிப்பு முயற்சியொன்றை ஆரம்பித்திருப்பதாக லங்கா ஹொஸ்பிட்டல்ஸ் அறிவித்துள்ளது.

பொருளாதார சவால்மிக்க நேரத்தில் இருதய அறுவைச்சிகிச்சைகள் மற்றும் இதயச்சாய நிழற்படம் (அஞ்சியோகிராம்) போன்றவற்றுக்கு ஏற்படும் நிதிச் சுமையைக் குறைப்பதும் நாட்டுக்காகப் பணியாற்றும் மற்றும் பணியாற்றியவர்களுக்கு உயர்ந்த தரத்திலான இருதய பராமரிப்புக்கான அணுகலை வழங்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த விசேட தள்ளுபடிக்கமைவாக 14,00,000 ரூபாவாக இருக்கும் இருதய அறுவைச் சிகிச்சைக்கான கட்டணம் 11,00,000 ரூபாவாகக் குறைக்கப்பட்டு, 3,00,000 ரூபாவை சேமிக்க முடியும். 50,000 ரூபா செலவில் இதயச்சாய நிழற்படத்தை (அஞ்சியோகிராம்) மேற்கொள்ள முடியுமென்பதுடன் லங்கா ஹொஸ்பிட்டலில் இருதய சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் நோயாளர்களுக்கு வைத்தியசாலைச் செலவுகள் முற்றாகத் தள்ளுபடி செய்யப்பட்டு இதற்கான செலவு 20,000 ரூபா மாத்திரமேயாகும். மேலதிக நன்மையாக அக்ரஹார காப்புறுதி உறுப்பினர்களுக்கும் இந்தத் திட்டம் தனித்துவமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையின் அபிவிருத்தி பணிகளுக்கு ஐக்கிய அரபு அமீரகம் ஒத்துழைப்பு





அபிவிருத்தியடைந்து வரும் இலங்கையை கட்டியெழுப்ப தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க ஐக்கிய அரபு அமீரகம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்குள் மேற்கொள்ளப்படும் முதலீடுகளை அதிகரிப்பதுடன், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுத்தருவதாகவும் இலங்கைக்கான ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதுவர் காலித் நசர் அல் அமேரி ( Khaled Nasser AlAmeri) தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதுவர் காலித் நசர் அல் அமேரி ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று (12) முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் தற்போது 1,50,000 இலங்கையர்கள் தொழில்செய்து வருவதாகவும் அந்தத் தொகையை மேலும் அதிகரிப்பது குறித்தும் இதன்போது கவனஞ்செலுத்தப்பட்டது.

இலங்கையின் ஆறாவது மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாக ஐக்கிய அரபு அமீரகமே காணப்படும் நிலையில், அந்தச் சந்தை வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்திக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அதேபோல், இரு நாடுகளுக்குமிடையில் காணப்படும் நீண்டகால நட்புறவை மேலும் பலப்படுத்திக்கொள்வதோடு இலங்கைக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு உதவியையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் தூதுவர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் உறுதியளித்தார்.

எதிர்வரும் காலங்களில் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு விஜயம்மொன்றை மேற்கொள்ளுமாறும், ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதுவர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அழைப்பு விடுத்தார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இலங்கை தூதரகத்தில் முழு அதிகாரமுள்ள மினிஸ்டர் பதவி வகிக்கும் அஹமட் எம்.ஏ.ஏ. அல் ஷெஹி உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் புத்தளம் மாவட்ட செயற்குழுக் கூட்டம்



அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் புத்தளம் மாவட்ட செயற்குழுக் கூட்டம் தில்லையடியில் இடம்பெற்றது.

கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை (09) இடம்பெற்ற இக்கூட்டத்தில், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவதென்பது குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, கடந்த பாராளுமன்றத் தேர்தலில் புத்தளத்தில் போட்டியிட்ட வேட்பாளர்களான என்.டி.எம்.தாஹிர், எம்.எச்.முஹம்மத் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர் கள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வரிசை யுகம் மீண்டும் தோன்றினால் கோட்டாவின் நிலையே அநுரவுக்கும்

## ஜனநாயக மக்கள் முன்னணியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளர் சசிகுமார்



நாட்டில் தற்போது தேங்காய் மற்றும் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமைக்கு அரசாங்கத்தின் தான்தோன்றித் தனமான செயற்பாடுகளே காரணமென ஜனநாயக மக்கள் முன்னணியின் கம்பஹா மாவட்ட அமைப்பாளர் சுப்ரமணியம் சசிகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

தற்போது நாட்டில் மீண்டும் வரிசை யுகம் உருவாகும் நிலைமை காணப்படுகிறது. மக்களை மீண்டும் வரிசையில் நிற்க வைத்தமைக்கான முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி அநுரகுமாரவின் அரசாங்கமே ஏற்க வேண்டும்.

அவர்களின் கொள்கைகளும் ஆலோசனை பெறாமல் எடுக்கப்பட்ட தீர்மானங்களுமே இதற்குக் காரணம். அவர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் மக்கள் அல்லலுற்று வருகின்றனர்.

தற்போது அரிசி ஆலை உரிமையாளர்கள் அரசாங்கம் கூறிய நிர்ணய விலையை ஏற்கமுடியாதென்று கூறிவிட்டனர்.

இதனால் அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு அரிசியை வழங்க முடியாத சூழ்நிலை தோன்றியுள்ளது.

இவ்வாறானதொரு நிலைமை தொடருமாயின் கோட்டாபயவின் நிலையே அநுரவுக்கும் ஏற்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காட்டு யானைத் தாக்குதலில் நபரொருவர் உயிரிழப்பு

அநுராதபுரம் நிருபர்

அநுராதபுரம், இபலோகம ,மஹ இலுப்பள்ளம பகுதியில் காட்டுயானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக இபலோகம பொலிஸார் தெரிவித்தனர்.

இபலோகம பொலிஸ் பிரிவின் உதேனிபுர பகுதியில் நேற்று முன்தினம் (11) இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் 62 வயதுடைய உதேனிபுர, மஹ இலுப்பள்ளம, இபலோகம பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பது தெரியவந்துள்ளது.

யானையின் தாக்குதலில் உயிரிழந்த நபர் சம்பவதினம் மஹ இலுப்பள்ளம நகருக்கு தேவை நிமித்தம் வந்து மீண்டும் வீடு செல்லும்போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இபலோகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சபாநாயகரைப் பாராளுமன்றத்தில் சந்தித்த இலங்கைக்கான தென்கொரியத் தூதுவர்





இலங்கைக்கான தென்கொரியத் தூதுவர் மியோன் லீ (Miyon Lee) சபாநாயகர் அசோக ரன்வலவை பாராளுமன்றத்தில் சந்தித்தார். இந்தச் சந்திப்பில் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீரவும் கலந்துகொண்டார்.

இச்சந்திப்பில் புதிய சபாநாயகருக்கு தென்கொரியத் தூதுவர் தனது பாராட்டைத் தெரிவித்துக்கொண்டார். தென்கொரியாவுக்கும் இலங்கைக்குமிடையில் காணப்படும் நீண்டகால உறவை நினைவுகூர்ந்த தூதுவர், இந்த உறவை மேலும் வலுப்படுத்தி இலங்கையின் அபிவிருத்திக்குத் தேவையான ஒத்துழைப்பை தென்கொரியா வழங்குமென்றும் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள திட்டங்களை செயற்படுத்தி புதிய அரசாங்கத்துடன் கலந்துரையாடி அத்திட்டங்களை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர எதிர்பார்த்திருப்பதாகவும் தென்கொரியத் தூதுவர் சுட்டிக்காட்டினார். மேலும், கண்டி சுரங்கப்பாதை (Kandy Tunnel) திட்டத்தை ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகள் இறுதிக்கட்டத்தை எட்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இரு நாட்டுப் பாராளுமன்றங்களுக்குமிடையிலான உறவுகளைப் பலப்படுத்துவதற்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்றப் பணியாளர்களுக்கு தலைமைத்துவ மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் தென்கொரியத் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர், இலங்கைக்கும் தென்கொரியாவுக்குமிடையில் காணப்படும் தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் இதற்கு தென்கொரியாவின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்

# கல்வி, நிலம் மேம்படும்போது குடும்பம் சிறக்கும்

## உதயம் கனடா அமைப்பின் வருடாந்த ஒன்றுகூடலில் இராமகிருஸ்ணன் தர்மலிங்கம் தெரிவிப்பு





வவுனியா நிருபர்

கல்வி, நிலம் மேம்படும்போது குடும்பம் சிறக்கும் என்ற அடிப்படையில் உதவிக்கரம் நீட்டுகின்றோம் என உதயம் கனடா அமைப்பின் தலைவர் இராமகிருஸ்ணன் தர்மலிங்கம் தெரிவித்துள்ளார்.

கனடாவில் உதயம் கனடா அமைப்பின் வருடாந்த ஒன்றுகூடலும் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெற்றன. அந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''எமது இந்த அமைப்பானது 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஒரு நிர்வாக சபையால் விதைக்கப்பட்டு விதையாகி இன்று விருட்சமாய் வளர்ந்து பல இன மக்களுக்கு நிழலாய் இருப்பதுடன், இம்மரம் வளர்ந்து செழிப்பதற்கு உதவிய அனைத்து பங்காளிகளையும் பாராட்டி நன்றி கூறுகின்ற நாளாக உள்ளது.

இந்த அமைப்பு வளர்ந்த பாதை இலகுவானதல்ல. எத்தனையோ சவால்களையும் தடைகளையும் தாண்டி வெற்றிகரமாக இந்த நிலையை அடைத்திருக்கின்றது. இத்துடன், நின்று விடப்போவதில்லை. இன்னும் வெகுதூரம் பயணித்து அதன் இலக்கை அடைவதற்காக எனது தலைமையின் கீழ் இதை எட்டுவதற்கு சகல வளங்களையும் ஒருங்கிணைப்பேன் என உறுதிசெய்வதோடு, அதற்கான ஒத்துழைப்பை நீங்கள் அனைவரும் வழங்குவீர்கள் என உறுதியாய் நம்புகின்றேன்''.

எங்கள் சேவைகளையும் சாதனைகளையும் பட்டியலிட நேரம் போதாது. ஆனால், நாங்கள் வழங்கி வருகிற உதவிகளும் அதன் விளைவுகளும் சகலரும் அறிந்ததே. எமது மக்கள் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டிருந்தபோது நாம் பலவிதமான உதவிகளை வழங்கி அவர்களது மறு வாழ்வுக்காக ஒத்துழைப்பு வழங்குகினோம்.

இதற்கு உதாரணமாக மலையாளபுரத்தில் உள்ள அநாதைக் குழந்தைகள் இல்லம் நல்ல உதாரணமாகும். சட்டப்படி அனுமதிக்கப்பட்ட அநாதைக் குழந்தைகளைப் பராமரித்து அவர்கள் தங்கள் எதிர்காலத்தை சிறப்பாக அமைப்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்தி வருகின்றோம். இதுமட்டுமல்லாமல், பல மாவட்டங்களில் உள்ள வறுமையால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் உதவிசெய்வதுடன் சிறு வியாபாரம் செய்யும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உதவிசெய்து வருகின்றோம்.

கல்வி, நிலம் மேம்படும்போது குடும்பம் சிறக்கும் என்பது எமது குறிக்கோளாகும். இவை அனைத்துக்கும் பல வழிகளிலும் உதவிய, நிதி வழங்கிய அனைவருக்கும் நன்றி. இந்த ஒத்துழைப்பு இனியும் பன்மடங்கு கிடைக்குமென நன்றியுடன் எதிர்பார்க்கின்றேன்- எனத் தெரிவித்தார்







கொழும்பு சிற்றி மிஷன் சிறுவர் நத்தார் விழா சிற்றிமிஷன் இயக்குனர் அருட்திரு ஜி.ஏ.சதீஸ் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் உப தலைவர் டெனிஸ் தவராஜசிங்கம், சிறப்பு விருந்தினராக திருமதி சந்தியா குமாரி மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

# இலங்கை விமானப்படைக்கு அவுஸ்திரேலியா பீச் கிராப்ட் கிங் எயார் 350 விமானம் அன்பளிப்பு



அஷ்ரப் ஏ. சமத்

அவுஸ்திரேலிய விமானப்படைக்குச் சொந்தமான பீச் கிராப்ட் கிங் எயார் 350 விமானத்தை இலங்கை விமானப்படைக்கு அவுஸ்திரேலிய அரசு அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வு நேற்று (12) இரத்மலானை விமான நிலையத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் மார்ஷல் சம்பத் துயாகொன்த், அவுஸ்திரேலியாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன், இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, அவுஸ்திரேலியாவின் கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் பிரட்டி சொன்டர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அவுஸ்திரேலிய அரசு இந்த அன்பளிப்பானது கடல்சார் பாதுகாப்பு, அச்சுறுத்தல், போதைப்பொருள் கடத்தல், சட்டவிரோதமாக வெளிநாடுகளில் இடம்பெயர்தல் போன்ற பாதுகாப்புக் கடமைகளுக்காக இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவுக்கிடையேயான அர்ப்பணிப்பின் புதியதோர் மைல்கல்லாக அமைகிறதென இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலாளர் அங்கு உரையாற்றுகையில்,

கிங் எயார் 350 விமானத்தை அன்பளிப்பாக வழங்கிய அவுஸ்திரேலிய அரசுக்கு நன்றி தெரிவித்தார். கடந்த ஒக்டோபர் மாத இறுதிப் பகுதியில் இலங்கை விமானப்படையின் சட்டபூர்வமாகக் கையளிக்கப்பட்ட இந்த நவீன இரட்டை எஞ்சின் விமானமானது ஆட்கடத்தல் உட்பட நாடு கடந்த குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கும் இலங்கையின் வான்வழி மற்றும் கடல்சார் கண்காணிப்பு திறனை பாரிய அளவில் மேம்படுத்தவும் உதவும்.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் பாதுகாப்பைப் பேணுவதற்கு இரு நாடுகளும் மேற்கொள்ளும் பரஸ்பர முயற்சிகளை ஊக்கப்படுத்தும் வகையில் இச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பம் அமைகிறதென அவுஸ்திரேலியாவின் உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன் அங்கு உரையாற்றினார். இரு நாடுகளுக்குமிடையே இவ்விமான அன்பளிப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதன்போது விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவும் அவுஸ்திரேலியாவின் சார்பாக கடற்படைத்தளபதி ரியல் அட்மிரல் பிரட்டி சொன்டரும் கைச்சாத்திட்டனர்.






கொழும்பு -14, கிராண்ட்பாஸ் ஜோசப் வாஸ் ஆரம்ப பாடசாலையின் ஆண்டு விழா அதிபர் திருமதி சுபாஷினி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஜோசப் பெர்னாண்டோ, பெரின்டன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (படங்கள் – எம்.நசார்)

# ''வடக்கு கடற்பரப்பில் இந்தியப் படகுகள் மீன்பிடியில் ஈடுபட அனுமதியளிக்கும் எந்தத் திட்டமும் எம்மிடம் இருந்திருக்கவில்லை''

## முன்னாள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

பு.கஜிந்தன்



இந்திய இழுவைமடிப் படகுகள் இலங்கையின் வடக்கு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கும் எந்தவகையான திட்டமும் கடந்த காலங்களில் தம்மிடம் இருந்திருக்கவில்லையென்று தெரிவித்துள்ள முன்னாள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தற்போதைய பலவீனங்களை மறைக்கும் வகையில் கடற்றொழிலாளர்களைத் திசைதிருப்ப முயற்சிக்கப்படுகின்றதா என்ற சந்தேகத்தையும் வெளிப்படுத்தியுள்ளாார்.

வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளை அண்மையில் சந்தித்த தற்போதைய கடற்றொழில் அமைச்சர், இந்திய இழுவைப் படகுகளுக்கு அனுமதி வழங்கும் முன்னைய அரசாங்கத்தின் சிந்தனையை தற்போதைய அரசாங்கம் கைவிட்டு விட்டதாகக் கூறியதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ''எமது வளங்களை அழிக்கின்ற இழுவைமடி தொழில் முற்றாக நிறுத்தப்பட வேண்டுமென்பதே 1990ஆம் ஆண்டுகளிலிருந்து என்னுடைய உறுதியான நிலைப்பாடாக இருந்து வருகின்றது. கடற்றொழில் அமைச்சராக நான் செயற்பட்ட காலப்பகுதியில் கடற்றொழில் அமைச்சின் நிலைப்பாடும் அவ்வாறே இருந்தது.

இந்நிலையில், உண்மைக்குப் புறம்பான கருத்துகள் வெளியிடப்படுவதானது, ஆழமான சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இது தொடர்பாக கடற்றொழிலாளர்கள் விழிப்பாக இருக்கவேண்டும்'' என்றார். தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவைச் சந்தித்தபோதும் இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பில் தனது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தமையையும் சுட்டிக்காட்டினார்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க ஸ்ரிக்கர் ஒட்டி விழிப்புணர்வு





சாவகச்சேரி நிருபர்

நாட்டில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற பால்நிலைசார் வன்முறைகளைத் தடுக்கும் விதமாக கடந்த செவ்வாய்க்கிழமை (10) கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபை முன்றிலில் வைத்து பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற வாகனங்களில் விழிப்புணர்வு ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டன.

'பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர ஒன்றுபடுவோம்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற 16 நாள் செயற்பாட்டியம் நிகழ்வின் இறுதிநாளில் கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் மேற்படி விழிப்புணர்வு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற வாகனங்களுக்கு ஸ்ரிக்கர் ஒட்டும் விழிப்புணர்வு நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகேஸ்வரன், வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் வாகீசன் மற்றும் கிறிசலிஸ் நிறுவனத் திட்ட இயக்குநர் அஹமட் ரிஸ்லான் உள்ளிட்டோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது "பெண்களின் பாதுகாப்பு நம் அனைவரதும் பொறுப்பு, பெண்களின் பாதுகாப்பான பயணத்தில் நாமும் கண்ணியத்துடன் பங்கு கொள்வோம்" ஆகிய வாசகங்கள் அடங்கிய ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

# கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

பு.கஜிந்தன்

51ஆவது படைப்பிரிவு இராணுவ முகாமைச் சேர்ந்த புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைவாக காரைநகர் பகுதியில் வைத்து சாவகச்சேரி, மீசாலை பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர்கள் இருவர் பெருமளவான கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (11) அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது 213 கிலோ 800 கிராம் எடையுடைய கஞ்சா மற்றும் ஒரு படகு என்பன கைப்பற்றப்பட்டன.கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் சான்றுப் பொருட்களுடன் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம்



பு.கஜிந்தன்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டம் மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபனின் தலைமையில் நேற்று முன்தினம் (11) மு.ப.11.30 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத் தப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக ஆராயப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அரசாங்க அதிபர்,

''வேலைத்திட்டங்களை குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட சவால்களை ஏற்று தற்றுணிவின் அடிப்படையிலும் செயற்பட்ட மாவட்ட செயலக பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள், பிரதி உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் ஆகியோரையும் பாராட்டுகின்றேன்.

குறிப்பாக, இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் தொடர்பாக ஏற்பட்ட சாவல்களுக்கு மத்தியிலும் கடும் முயற்சிகள் எடுத்துவருவது எமது இளைஞர் சமுதாயத்துக்கு ஆரோக்கியமான விடயம். அவ் உபகரணங்களின் பாவனை தொடர்பாக பிரதேச செயலக ரீதியான கண்காணிப்பு அவசியமானது. வேலைத்திட்டங்களில் திருப்திகரமான முன்னேற்றம் காணப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் புள்ளிவிபர குடிசனத்தொகை மதிப்பிடும் கணிப்பீட்டில் காரைநகர், வேலணை, சங்கானை மற்றும் கோப்பாய் பிரதேச செயலகங்கள் முறையே இதுவரை பூர்த்திசெய்யப்பட்டுள்ளன'' என்றார்.

இக்கூட்டத்தைத் தொடர்ந்து, நலன்புரி நன்மைகள் (அஸ்வெசும) தொடர்பான திட்டங்களை நடைமுறைப்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது.

இக் கலந்துரையாடலில் பிரதம கணக்காளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், அஸ்வெசும திட்டத்துக்குப் பொறுப்பான மாவட்ட ஒருங்கிணைப்பாளர், பிரதேச செயலக பிரதி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கணக்காளர்கள் மற்றும் மாவட்ட செயலக திட்டமிடல் துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

# பால்நிலை சமத்துவம் - ஒப்புரவு குறித்த இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவம் பற்றிய இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு நேற்று முன்தினம் புதன்கிழமை (11), பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

'பால்நிலையை முதன்மைப்படுத்துவதற்கான பல்துறைசார்ந்த மற்றும் ஒன்றிணைந்த முன்னோக்குகள்' என்ற தொனிப்பொருளுடன் இடம்பெற்ற இந்த 'வியோமம்' சர்வதேச ஆய்வு மாநாடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையப் பணிப்பாளரும் சந்தைப்படுத்தல் துறைத் தலைவருமான பேராசிரியர் எஸ்.சிவாணி தலைமையில் நடைபெற்றது.

துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட பால்நிலை ஆலோசகரும் ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீட பீடாதிபதியுமான கலாநிதி மனோஜ் பெர்னாண்டோ, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி அசூசா குபோட்டா மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் அமைந்துள்ள தர்மம் நிலையத்தின் பணிப்பாளரும் சட்டவாளருமான நகுலேஸ்வரன் தர்மலிங்கம் ஆகியோர் திறவு உரையாளர்களாகக் கலந்துகொண்டனர்.

மாநாட்டுக்கு முன்னதாக பால்நிலை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான கண்காட்சியும் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கண்காட்சியில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பால்நிலை வன்முறை குறித்த 56 உண்மைச் சம்பவங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் மிக முக்கிய அம்சமாக தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப்பெற்ற மாற்றுத்திறனாளி மாணவர்களின் நடன நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆய்வு மாநாட்டு திறவுரைகளைத் தொடர்ந்து, ஆய்வுக் கட்டுரைகள், அனுபவப் பகிர்வுகள் மற்றும் செய்தி மடல் வெளியீடு இடம்பெற்றதுடன், வடக்கு மாகாணத்தில் பால்நிலை சமத்துவத்தை முதன்மைப்படுத்துவதற்காகத் தம்மை அர்ப்பணித்து சேவையாற்றியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாணத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் பால்நிலை மேம்பாட்டுப் பணிகளில் ஈடுபடும் சமூக மட்டப் பிரதிநிதிகள், பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், அரசாங்க அலுவலர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# காணி உரிமை விடயத்தில் மாற்றுக்கருத்து ஏற்படின் மக்களின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும்

## பாரத் அருள்சாமி எச்சரிக்கை

எஸ்.கணேசன்

''மக்களின் அடிப்படை எதிர்பார்ப்பான காணி உரிமை விடயத்தில் அரசாங்கம் உரிய திட்டத்தை அமுல்படுத்த வேண்டும். இவ்விடயத்தில் மாற்றுக் கருத்துக்கள் ஏற்படின் மக்களின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும்'' என என தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

''மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு அதிகமான அங்கத்துவத்தைப் பெற்று ஆட்சி பீடம் ஏறியுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதில் பின்னடைவைக் காட்டுகிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாட்டை முகாமைத்துவம் செய்வதில் அரசாங்கம் பாரிய பின்னடைவை சந்தித்து வருகிறது. இது நாட்டு மக்களை பெருமளவு பாதிக்கும் நிலையில் விசேடமாக மலையக மக்களை பெருமளவு பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

மலையக மக்களின் காணி உரிமை என்பது அவர்களின் அடிப்படை உரிமை கோரலும் அவர்களின் பல ஆண்டு எதிர்பார்ப்பும் ஆகும். இதனை தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனும் வலியுறுத்தியுள்ளார்.

பல அரசாங்கங்கள் ஆட்சி பீடம் ஏறிய போதும் எமது மக்களுக்கு பல வாக்குறுதிகளை அளிக்கின்றார்கள். அந்த வகையில் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மலையக மேடைகளில் பலபுரட்சிகரமான திட்டங்களை எமது மக்களுக்கு செய்வதாக உறுதியளித்திருந்தார்.



இருப்பினும், எமது அடிப்படை எதிர்பார்ப்பான காணி உரிமை தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் அல்லது பொறுப்பான அமைச்சரின் உறுதி வழங்காத நிலையில் அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள செய்தி பலரை ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளது.

கடந்த காலங்களில் 07 பேர்ச் நிலம் வழங்க வேண்டும் என பல போராட்டங்களுக்கு மத்தியில் அது சாதகமானது. பின்னர், 10 பேர்ச் நிலத்தை பெற்றுக் கொடுப்பதற்கான பல பிரயத்தனங்களுக்கு மத்தியில் பல எதிர்ப்புகளை தாண்டி இந்திய அரசாங்கத்தினால் கட்டப்பட்டு வரும் 1,700 வீடுகள் எம்மால் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

நான் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவராக கடமையாற்றிய காலப்பகுதியில் இந்நிலங்களை விடுவித்து வழங்க பல எதிர்ப்புகளையும் சவால்களையும் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், 2020ஆம் ஆண்டு மக்கள் வாழும் காணிகளுக்கான உறுதிப்பத்திரத்தை பெற்றுக்கொடுக்க விசேட வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தி அதன் மூலமாக தற்போது காணி மறுசீர்திருத்த ஆணைக்குழுவினால் எமது மலையக மக்களுக்கு சட்டரீதியான காணி உறுதிப்பத்திரங்களை வழங்க பல சவால்களையும் எதிர்ப்புகளையும் தாண்டி அதன் இறுதிக்கட்டத்தை அடைய நான் வழி சமைத்து கொடுத்தேன். அதன் காரணமாக தற்போது நுவரெலியா, கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கு சட்டப் பூர்வமான காணி உறுதிப்பத்திரங்கள் எமது சொந்தங்களுக்கு வழங்கப்பட்ட வண்ணமுள்ளன. இது எனக்கு மட்டற்ற பெருமையை வழங்குகிறது. இவ்வாறான நிலையில் அரசாங்கம் மாடி வீடுகளை அமைப்பதற்கான யோசனை முன் வைத்துள்ளமை அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது நாடெங்கிலும் லயன் மற்றும் தற்காலிக குழு வாழும் 170,000 இற்கும் அதிகமான குடும்பங்கள் பத்து பேர்ச் அடிப்படையில் தனி வீடுகளைப் பெற்றுக் கொள்ள மொத்த பெருந்தோட்டப் பகுதிகளில் 1% குறைவான நிலப்பகுதியே தேவைப்படும். இது தொடர்பான ஆய்வறிக்கைகள் பல சிவில் அமைப்புகள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, காணி அமைச்சு என்பவற்றின் பரிந்துரையோடு நான் தயாரித்திருந்த அறிக்கை கடந்த காலங்களில் என்னால் அரசுக்கு வழங்கப்பட்டது. இருப்பினும் முன்னாள் பிரதமரின் அசமந்தப்போக்கின் காரணமாக இத்திட்டத்துக்கான தீர்வு பின்னடைவானது.

எனவே மலையகப் பகுதிகளில் கண்டி மாவட்டம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்புரிமையையும் மக்களின் பேராதரவையும் பெற்றுள்ளது. எனவே மக்களின் பெரும் எதிர்பார்ப்பும் அவர்களுக்கு சேவை செய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பும் அரசாங்கத்திடம் உள்ளது.

மக்களின் அடிப்படை எதிர்பார்ப்பான காணி உரிமை விடயத்தில் அரசாங்கம் உரிய திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்வதுடன், எமது காணி உரிமை விடயத்தில் மாற்றுக் கருத்துகள் ஏற்படின் மக்களின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும்'' என தெரிவித்தார்.

# பயிர்ச் சேதத்தைத் தடுக்க விவசாய பிரதிநிதிகள் அமைப்புப் பிரிவு

## காணி அமைச்சர் லால்காந்த தெரிவிப்பு

எம்.ஏ.அமீனுல்லா



வன விலங்குகளால் பயிர்கள் சேதமடைவதைத் தடுக்க ஒவ்வொரு கிராம சேவைக் களத்திலும் விவசாய சேவைகள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு பிரிவை நிறுவவுள்ளதாக விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடைகள் மற்றும் காணி அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளாார்.

இப்பிரச்சினையை விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் சரியாக இனங்கண்டு, அவர்களின் முன்மொழிவுகள் மூலம் பிரச்சினைக்கு வழங்கப்படவேண்டிய தீர்வுகள் கண்டறியப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் நேற்று முன்தினம் (11) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அமைச்சர்,

''மேற்படி குறித்த பிரிவுகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் மக்களுக்கு வன விலங்குகளிடமிருந்து விவசாய நிலத்தைப் பாதுகாக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து போதிய அறிவும் பயிற்சியும் அளிக்கப்படும்.

இதற்காக ஒவ்வொரு கிராம சேவைப் பிரிவுகளிலும் மக்கள் தொடர்பு பிரிவுகளை ஏற்படுத்துவதன் மூலம் இப்பிரச்சினைக்கு விரைவான தீர்வு கிடைக்குமென நம்புகிறோம்.

பிரச்சினைக்கு நீண்டகாலத் தீர்வுகளை வழங்கும் வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வரும் நிலையில், இந்த வேலைத்திட்டத்தை நாங்கள் நடைமுறைப்படுத்துகின்றோம்.

கண்டி மாவட்டத்தில் 1,555 பதிவுசெய்யப்பட்ட விவசாய அமைப்புகள் உள்ளன.

அடுத்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு முன் முன்மொழிவுகளைப் பெறுமாறு விவசாய சேவைகள் திணைக்களத்துக்கு விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர். அதன்படி, இந்த வேண்டுதலுக்கான பதிலை மிக விரைவில் வழங்குவதே எங்கள் நோக்கம்.

வன விலங்குகளைக் கொல்லவேண்டுமென்று நான் ஒருபொழுதும் கூறவில்லை. எது எப்படியிருந்தாலும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இந்தப் பிரச்சினையில் தலையிட்டால் நல்லது.

ஏனென்றால், இப்படி ஒரு பிரச்சினை இருப்பதை விவசாயிகள் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமெனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பிரதியமைச்சர் ஹன்சக விஜேமுனி, பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை முழுமையாக மறுசீரமைக்கத் தீர்மானம்

## பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் தெரிவிப்பு

எஸ்.கணேசன்



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முழுமையாக மறுசீரமைக்கப் படவுள்ளது. இதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மறுசீரமைப்பு நடவடிக்கை ஜனவரியில் இடம்பெறுமெனவும் இ.தொ.காவின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்தார்.

கொட்டகலை சீ.எல்.எவ். கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம்(11) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், தவிசாளர் எம்.ராமேஷ்வரன் ஆகியோரின் இணைத்தலைமையில் தேசிய சபை கூடியது.

இந்தத் தேசிய சபைக் கூட்டம் முடிவடைந்த பின்பே தேசிய சபையில் எடுக்கப்பட்ட மேற்படி முடிவை பிரதித் தலைவர் அறிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் இ.தொ.கா. ஐந்து சபைகளைக் கைப்பற்றியது. எனவே, இம்முறையும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு வியூகம் வகுக்கப்படுகின்றது.

காங்கிரஸின் தனித்துவமான சேவல் சின்னத்தில் போட்டியிடுவது பற்றி பரிசீலிக்கப்படுகின்றது. கூட்டணி அமைப்பது தொடர்பில் இன்னும் பேச்சு நடத்தப்படவில்லை. அது பற்றியும் பரிசீலிக்கப்படுகின்றது.

இ.தொ.காவின் மறுசீரமைப்பு நடவடிக்கை விரைவில் இடம்பெறவேண்டுமென்ற தீர்மானம் தேசிய சபையில் எடுக்கப்பட்டது. இதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இன்னும் 20 நாட்களில் அதற்குரிய நடவடிக்கை இடம்பெறும். நியமிக்கப்பட்ட குழு தனது பரிந்துரைகளை தேசிய சபைக்கு முன்வைக்கும்.

அதற்கமைய மறுசீரமைப்பு இடம்பெறும். காங்கிரஸால் முன்னெடுக்கப்பட்ட காணி உரிமை வழங்கும் வேலைத்திட்டத்தை தற்போதைய அரசாங்கம் முன்னெடுப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். இப்படியான அரசின் நல்ல திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 10 பேர்ச்சஸ் காணியுடன் தனிவீடு அவசியம். மாடி வீட்டுத் திட்டத்தை நாம் எதிர்க்கின்றோம்'' - என்றார்.





*மாத்தளை மாவட்டத்திலுள்ள சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்கள் தமது உற்பத்திகளை மேம்படுத்திக்கொள்ளும் வகையிலான ஒன்றுகூடலொன்று மாத்தளை, கிரேண்ட் மவுண்டன் வரவேற்பு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது மாத்தளை உதவிச் செயலாளர் திருமதி ரியால்தீன், கைத்தொழிலாளர்கள் சங்கத்தலைவர் சமன்குமார உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். (படங்கள்: உக்குவளை நிருபர்)*

## செய்தித் துளிகள்



திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் கார்த்திகை தீபத்திருவிழாவை யொட்டி, இன்று (13) மாலை 2,668 அடி உயர மலை மீது மகாதீபம் ஏற்றப்படவுள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சூடானில் உள்நாட்டு கலவரம் நீடித்து வரும் நிலையில் துணை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள கிராமங்களை குறிவைத்து இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் உட்பட 127 பேர் உயிரிழந்தனர். இதற்கு துணை இராணுவம் பதிலடி கொடுக்கும் என்பதால் உள்நாட்டு போர் தீவிரமடையும் அபாயமுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★



சிரியாவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போது தப்பியோடிய ஜனாதிபதி பஷர் அல் - அசாத்தின் தந்தையுமான ஹாஃபேஸ் அல்-அசாத்தின் கல்லறை, கிளர்ச்சிப் படையினரினால் தகர்க்கப்பட்டு தீ வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை, சிரியாவிலுள்ள ஆயுதங்கள் தீவிரவாதிகளின் கைகளுக்கு செல்வதை தடுக்க, இஸ்ரேல் அங்கு முப்படைகள் மூலம் இரண்டு நாட்களாக கிட்டத்தட்ட 500 முறை தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதில் சிரியாவின் ஆயுதக் கிடங்குகள் அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★

உலகில் 400 பில்லியன் டொலர் சொத்துக்களை குவித்த முதல் நபர் என்ற சாதனையை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவுனர் எலான் மஸ்க் படைத்துள்ளார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் தலிபான் அகதிகள் விவகார அமைச்சர் கலீல் ரஹ்மான் ஹக்கானி உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

## மனிதாபிமான உதவிகளை தடைசெய்த இஸ்ரேல்



# பஞ்சத்தின் பிடியில் காஸா; உணவு - குடிநீரின்றி மக்கள் தவிப்பு

காஸாவுக்கான மனிதாபிமான உதவிகள் அனைத்தையும் இஸ்ரேல் இராணுவம் தடைசெய்துள்ளதால் காஸாவில் கடும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. உணவு, நீர், மின்சாரம் மற்றும் மருத்துவம் ஆகிய அடிப்படை உதவிகளின்றி மக்கள் தவித்து வருகின்றனரென ஐக்கிய நாடுகளின் சபை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி தொடங்கிய நிலையில் இப்போர் இன்று ஓராண்டை கடந்தும் நீடித்து வருகிறது. காஸாமீதான இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 44,805 இற்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 106,257இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். காஸாவுக்கு செல்லும் மனிதாபிமான உதவிகள் அனைத்தும் இஸ்ரேல் இராணுவத்தால் தடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கடந்த 66 நாட்களாக இஸ்ரேல் கைப்பற்றிய காஸாவின் வடக்கு பகுதிகளான பெயிட் லஹியா, பெயிட் ஹனொன் மற்றும் ஜபாலியா ஆகிய இடங்களில் வாழும் 65,000 முதல் 75,000 பலஸ்தீனர்கள் உணவு, நீர், மின்சாரம் மற்றும் மருத்துவம் ஆகிய அடிப்படை உதவிகளின்றி தவித்து வருவதாகவும் 5,500இற்கும் மேற்பட்டோர் பெயிட் லஹியாவிலிருந்து வலுக்கட்டாயமாக இடமாற்றப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவரங்களின் கூட்டமைப்பான ஓ.சி.எச்.ஏ. தெரிவித்துள்ளது.

மேலும் அங்கு நிலவும் உணவுப் பற்றாக்குறை குறித்து அந்த கூட்டமைப்பு தெரிவிக்கையில்,

மொத்தமாக காஸாப் பகுதியில் ஐ.நாவைச் சேர்ந்த வெறும் நான்கு உணவுக்கிடங்குகள் மட்டுமே தற்போது செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி, காஸா நகரத்துக்கான ஐ.நாவின் மனிதாபிமான மற்றும் புனரமைப்பு ஒருங்கிணைப்பாளர் சிக்ரிட் கொக் தெரிவிக்கையில், ‘‘காஸாவில் பொதுமக்கள் உயிர்வாழும்



சூழல் முற்றிலும் அழிவுகரமானதாகவுள்ளது. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. அங்கு நிலைமையை இன்னும் மோசமாகியுள்ளது. இதனால், ஐ.நா. உட்பட பல உதவி நிறுவனங்கள் காஸா மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்க முடியாத சூழலுள்ளது’’ என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், தான் உட்பட பல்வேறு ஐ.நா. அதிகாரிகளும் வடக்கு காஸா பகுதிகளில் கால்வாய்கள் மற்றும் வணிகப்பொருட்களை அனுமதிக்கவும் தெற்கில் எகிப்திலிருந்து ரஃபா எல்லை மீண்டும் திறக்கவும் அதன் வழியாக இருமுறை பயன்படக்கூடிய பொருட்களை அனுமதிக்கவும் தொடர்ந்து பலமுறை இஸ்ரேலிடம் கேட்டுக்கொண்டிருப்பதாக சிக்ரிட் கொக் தெரிவித்துள்ளார். கொக்கின் கருத்துகளுக்கு தங்களிடம் எந்தவொரு பதிலும் இல்லை என்று இஸ்ரேலின் ஐ.நா. தூதுவர் தெரிவித்துள்ளார்.ஏற்கனவே, இஸ்ரேலின் தாக்குதல்களினால் வாழ்வாதாரத்தை இழந்து வாடும் பலஸ்தீனர்களுக்கு, தற்போது உணவு, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் தடுக்கப்பட்டிருப்பது, அம்மக்களுக்கு இஸ்ரேலால் ஏற்பட்டுவரும் துயரத்தை மேலும் அதிகரித்துள்ளது.

## மாணிக்கத்தால் அலங்கரிக்கப்பட்ட உலகின் முதல் வைர கிரீடம்





ஸ்ரீரங்கம் ரங்கநாதர் மீது தனக்குள்ள பக்தியால் அரை அடி உயரம், 3,160 கெரட் மாணிக்கக் கல், 600 வைரக் கற்கள் மற்றும் மரகதக் கல்லைக் கொண்டு தங்கத்தால் வடிவமைக்கப்பட்ட பல கோடி மதிப்புள்ள வைரகிரீடத்தை பரதநாட்டிய கலைஞரான ஜாகிர் உசேன் காணிக்கையாக வழங்கியுள்ளார்.

இதுகுறித்து ஜாகிர் உசேன் தெரிவிக்கையில்,

ராஜஸ்தான் மாநிலத்திலிருந்து ஒற்றை மாணிக்கக் கல் கொண்டு வரப்பட்டு அதை கிரீடம் வடிவில் குடைந்து அதன் மீது, 400 கிராம் தங்கத்தில் வைரம், மரகதக்கற்கள் பதிக்கப்பட்டு இந்த கிரீடம் செய்யப்பட்டுள்ளது. இதனை செய்வதற்கு ஏறத்தாழ 08 ஆண்டுகள் ஆனது. கிரீடம் செய்வதற்கான பெரியளவிலான மரகதக் கல்லை தேடி கண்டுபிடித்து வாங்குவதற்கே 03 ஆண்டுகள் ஆனது.

உலகில் முதன்முறையாக மாணிக்கக்கற்களால் செய்யப்பட்ட வைரக் கிரீடம் இது என்பது இதன் தனிச் சிறப்பு. பிறப்பால் நான் இஸ்லாமியராக இருந்தாலும் ரங்கநாதர் மீது எனக்குள்ள பற்றால் இதனை செய்தேன்” என நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். இந்த வைரகிரீடத்தின் உண்மையான மதிப்பை அவர் கூறவில்லை.

## இலங்கை தமிழர்கள் நால்வர் இராமநாதபுரத்தில் கைது



தங்கச்சிமடம் கடற்கரையிலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு செல்ல முயன்றதாக இலங்கை தமிழர்கள் நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களில் கோகிலவாணி என்பவர், 02 ஆண்டுகளுக்கு முன் தனுஷ்கோடிக்கு அகதியாக வந்து, மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்தபோது, சீட்டு நடத்தி மோசடி செய்துவிட்டு, தற்போது சசிகுமார் என்பவருடன் இலங்கைக்கு தப்பிச் செல்ல முயன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

மற்றொருவரான நாகராஜ் தனது நிலத்தை விற்கவும் சேகர் என்பவர் உடல் நலம் பாதிக்கப்பட்ட தனது உறவினரை பார்க்கவும் இலங்கைக்கு செல்ல முயன்றதாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

## பொக்ஸிங் டே




இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் மோதும் பொக்சிங் டே டெஸ்ட் போட்டி முதல் நாள் டிக்கெட்டுகள் காலியாகின.

அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி, ஐந்து போட்டி கொண்ட பார்டர்-கவாஸ்கர் டிராபி டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்டில் இந்தியா வென்றது. இரண்டாவது டெஸ்ட் அடிலெய்டில் பகலிரவு போட்டியாக நடந்தது. இதைக் காண, மூன்று நாளில் மொத்தம் 1,35,012 பேர் திரண்டனர். முன்னதாக 2014-15இல் இங்கு, 05 நாள் நடந்த டெஸ்ட் போட்டியை 1,13,009 பேர் பார்த்தது தான் அதிகமாக இருந்தது.

இதனால் அடுத்தடுத்த போட்டியை காண, டிக்கெட் கிடைப்பது சிரமமாக உள்ளது. இரு அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் பிரிஸ்பேனில் டிச. 14 - 18இல் நடக்கவுள்ளது.

நான்காவது டெஸ்ட், கிறிஸ்மஸ் முடிந்த மறுநாள் பொக்சிங் டே போட்டியாக டிசம்பர் 26இல் மெல்போர்னில் ஆரம்பமாகிறது.

கிரிக்கெட் அவுஸ்திரேலியா வெளியிட்ட செய்தியில், நான்காவது, பொக்சிங் டே டெஸ்ட் போட்டி, ரசிகர்களுக்கான முதல் நாள் டிக்கெட் முழுவதும் விற்றுத் தீர்ந்தன என தெரிவித்துள்ளது.



## உலகக்கிண்ண நூற்றாண்டு விழா

**மொராக்கோ, ஸ்பெய்ன் போர்த்துகல் ஆகியன 2030ஆம் ஆண்டு உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை கூட்டாக நடத்தும் என்று உறுதிப்படுத்தப்பட்டது. 100 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் ஆர்ஜென்ரீனா, உருகுவே, பரகுவே ஆகிய நாடுகளில் முதல் மூன்று போட்டிகள் நடைபெறும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.**

**உருகுவேயில் முதலாவது உலகக்கிண்ணப் போட்டி நடைபெற்றது. இறுதிப்போட்டியில் ஆர்ஜென்ரீனாவும்ர உருகுவேயும் விளையாடின. உலகக்கிண்ணப் போட்டியின் நூற்றாண்டைக் குறிக்கும் இந்த மூன்று நாடுகளும் போட்டிகளை நடத்த ஆர்வம் காட்டின.**

## சவூதியில் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

**2034ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை சவூதி அரேபியா நடத்தும் என்று பீபா நிர்வாகக் குழு புதன்கிழமை உறுதிபடுத்தியது.**

**2034ஆம் ஆண்டு போட்டியை நடத்தும் ஒரே ஒரு நாடாக சவூதி மட்டும் விண்ணப்பித்திருந்தது. உலகக்கிண்ணப் போட்டியை கண்டங்களுக்கு இடையே சுழற்றுவதற்கான கொள்கையை பீபா செயல்படுத்தியது. இது ஆசியா அல்லது ஓசியானியாவிலிருந்து ஏலங்களை மட்டுமே வரவேற்றது.**

**கடந்த ஆண்டு வேட்புமனுவைச் சமர்ப்பிக்க ஏலதாரர்களுக்கு ஒரு மாதம் மட்டுமே அனுமதி வழங்கியது. போட்டியில் இருந்த அவுஸ்திரேலியாவும் இந்தோனேஷியாவும் பின்வாங்கின.**

**சவூதி அரேபியா ஃபார்முலா ஒன் கிராண்ட் பிரிக்ஸ் - ஜெட்டா, ஹெவிவெயிட் குத்துச்சண்டை போட்டிகள் மற்றும் WTA இறுதிப் போட்டிகள் உட்பட பல உயர்மட்ட விளையாட்டுப் போட்டிகளை நடத்த சவூதி தயாராக உள்ளது.**




## உலக உதைபந்தாட்ட அணியில் மெஸ்ஸி - ரொனால்டோவுக்கு இடமில்லை

*(ரமணி)*

FIFPRO ஆண்கள், பெண்கள் உலக 11 அணி வீரர்களின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. 70 நாடுகளைச் சேர்ந்த 28,000 தொழில்முறை உதைபந்தாட்ட வீரர்கள் வாக்களித்து இந்த அணிகளைத் தெரிவுசெய்துள்ளனர்.

ஓய்வு பெற்ற டோனி குரூஸ் உட்பட ஆறு ரியல் மாட்ரிட் வீரர்கள், நான்கு மான்செஸ்டர் சிட்டி நட்சத்திரங்கள் 2024 ஆண்கள் உலக 11இல் சேர்க்கப்பட்டனர்.




டானி கார்வஜல், அன்டோனியோ ருடிகர், எடர்சன், ரோட்ரி ஆகியோர் முதன் முதலாக உலக 11 அணியில் இடம் பிடித்துள்ளனர். லூசி ப்ரோன்ஸ், மேரி ஏர்ப்ஸ், அலெக்ஸ் கிரீன்வுட், லாரன் ஜேம்ஸ், கெய்ரா வால்ஷ் ஆகியோருடன் பெண்கள் உலகம் அணியில் உள்ளனர்.

பிரேஸில் வீராங்கனையான மார்ட்டா 2021ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த ஆண்டில் அணிக்குத் திரும்புகிறார்.

அதே சமயம் பார்பரா பண்டாவைச் சேர்ப்பதன் மூலம் பெண்கள் உலக 11ஆவது இடத்தைப் பிடித்த முதல் ஆபிரிக்க வீராங்கனை என்ற பெருமையை ஜம்பியா பெற்றுள்ளது.

மெஸ்ஸி அணியில் இடம்பெறாத 2006க்குப் பிறகு 2024ஆம் ஆண்டு முதல் உலக 11 அணி இதுவாகும். ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த இவர், 17 முறை தனது சகாக்களால் ஆண்டின் சிறந்த அணியில் இடம்பிடித்த பிறகு, உலக 11 போட்டிகளில் பங்கேற்றதற்கான அனைத்து நேர சாதனையையும் படைத்துள்ளார்.

**பெண்கள் அணி**

***கோல்கீப்பர்:*** மேரி ஏர்ப்ஸ் (மான்செஸ்டர் யுனைடெட்/பாரிஸ் செயின்ட் ஜெர்மைன், இங்கிலாந்து)

***டிஃபெண்டர்கள்:*** லூசி வெண்கலம் (பார்சிலோனா/செல்சி, இங்கிலாந்து), ஓல்கா கார்மோனா (ரியல் மாட்ரிட், ஸ்பெயின்), அலெக்ஸ் கிரீன்வுட் (மான்செஸ்டர் சிட்டி, இங்கிலாந்து)

***மிட்பீல்டர்கள்:*** ஐடானா பொன்மதி (பார்சிலோனா, ஸ்பெயின்), அலெ11 ஏ புட்டெடெல்லாஸ் (பார்சிலோனா, ஸ்பெயின்), கெய்ரா வால்ஷ் (பார்சிலோனா, இங்கிலாந்து)

***ஃபார்வர்ட்ஸ்:*** பார்ப்ரா பண்டா (ஷாங்காய் ஷெங்லி/ஆர்லாண்டோ பிரைட், ஜாம்பியா), லிண்டா கைசெடோ (ரியல் மாட்ரிட், கொலம்பியா), லாரன் ஜேம்ஸ் (செல்சி, இங்கிலாந்து), மார்டா (ஆர்லாண்டோ பிரைட், பிரேஸில்)

**ஆண்கள் உலக அணி**

***கோல்கீப்பர்:*** எடர்சன் (மான்செஸ்டர் சிட்டி, பிரேஸில்)

***டிஃபெண்டர்கள்:*** டானி கார்வஜல் (ரியல் மாட்ரிட், ஸ்பெயின்), விர்ஜில் வான் டிஜ்க் (லிவர்பூல், நெதர்லாந்து), அன்டோனியோ ரூடிகர் (ரியல் மாட்ரிட், ஜெர்மனி)

***மிட்ஃபீல்டர்கள்:*** ஜூட் பெல்லிங்ஹாம் (ரியல் மாட்ரிட், இங்கிலாந்து), கெவின் டி புரூய்ன் (மான்செஸ்டர் சிட்டி, பெல்ஜியம்), டோனி குரூஸ் (ரியல் மாட்ரிட், ஜெர்மனி), ரோட்ரி (மான்செஸ்டர் சிட்டி, ஸ்பெயின்)

***முன்கள வீரர்கள்:*** எர்லிங் ஹாலண்ட் (மான்செஸ்டர் சிட்டி, நார்வே), கைலியன் எம்பாப்பே (பாரிஸ் செயின்ட்-ஜெர்மைன்/ரியல் மாட்ரிட், பிரான்ஸ்), வினிசியஸ் ஜூனியர் (ரியல் மாட்ரிட், பிரேஸில்)

## 2024 ஆம் ஆண்டு அதிகம் தேடப்பட்ட வீரர்கள்



2024 ஆம் ஆண்டு முடிவடையும் நிலையில், கூகுள் தனது ஆண்டில் அதிகம் தேடப்பட்ட விளையாட்டு வீரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

அல்ஜீரிய குத்துச்சண்டை வீரர் இமானே கெலிஃப் தரவரிசையில் முதலிடத்தில் உள்ளார். அவருடன், இந்தியாவின் ஹார்திக் பாண்டியா, ஸ்பெயின் கால்பந்து வீரர் லாமின் யமல் மற்றும் குத்துச்சண்டை ஜாம்பவான் மைக் டைசன் போன்ற குறிப்பிடத்தக்க பெயர்கள் அவர்களின் சாதனைகள் மற்றும் சர்ச்சைகள் காரணமாக தலைப்புச் செய்திகளில் ஆதிக்கம் செலுத்தியது. இந்த விளையாட்டு வீரர்கள் 2024இல் தங்கள் முத்திரை பதித்தனர். அவர்களின் செயற்றிறன் மற்றும் தனிப்பட்ட சாதனைகளால் ரசிகர்களைக் கவர்ந்தனர். 2023இல் கூகுளில் 199.4 மில்லியன் தேடல்களுடன் அதிகம் தேடப்பட்ட விளையாட்டு வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆவார்.

**2024இல் அதிகம் தேடப்பட்ட முதல் 10 விளையாட்டு வீரர்கள்:**

***01. இமானே கெலிஃப்***
***02. மைக் டைசன்***
***03. லாமைன் யமல்***
***04. சிமோன் பைல்ஸ்***
***05. ஜேக் பால்***
***06. நிகோ வில்லியம்ஸ்***
***07. ஹார்திக் பாண்டியா***
***08. ஸ்காட்டி ஷெஃப்லர்***
***09. ஷஷாங்க் சிங்***
***10. ரோட்ரி***

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7